www.padippakam.com

# புதிய ஜனநாயகம்


1-15 பிப்ரவரி 89

4-6

விலை ரூ. [illegible]-50

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

## பதவியைப்பிடித்ததும் நிறம் மாறிய பச்சோந்தி கருணாநிதி!



www.padippakam.com



# பெருகிவரும்பட்டினிச்சாவுகள்

இறந்த கால்நடைகளின் மாமிசம்தான் உணவு! வறட்சியில் சிக்கி பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்ட மக்களுக்கு பாசிச ராஜீவ் கும்பல் படைக்கும் விருந்து!

கலகாந்தி. மூன்றாண்டுகளுக்கு முன்பு, பஞ்சம் பாரித்த அந்த ஒரிசா மாவட்டத்தில் ஏழை விவசாயிகளும் ஆதிவாசிகளும் பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்ட போது, எல்லா இந்தியப் பத்திரிக்கைகளும் அந்த அவலத்தைச் செய்தியாக வெளியிட்டு, அரசின் கையாலாகாத்தனத்தை தோலுரித்துக் காட்டின. வறட்சியால் பாதிக்கப்பட்ட அப்பகுதியில் தொடரும் பட்டினிச் சாவுகள், பெற்ற குழந்தையையே விற்கும் அவலம், நகர்ப்புறங்களை நோக்கி அகதிகளாக ஓடும் கொடுமைகளை அவை கதைகதையாக எழுதியதை நாடே நன்கறியும்.

● அடுத்தடுத்த ஆண்டுகளில் பருவ மழை பொய்த்து தொடர்ச்சியாக நிலவிய வறட்சியின் விளைவால் கலகாந்தியின் நிலைமை இன்று மிக மோசமாகிவிட்டது. பத்தாயிரக் கணக்கான விவசாயிகளும் ஆதிவாசிகளும் பிழைக்க வழி தேடி மத்தியப் பிரதேசத்துக்கும், ஆந்திராவுக்கும் ஓடுகின்றனர். கிராமப்புறங்கள் வெறிச்சோடி கிடக்கின்றன. முதியவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், நிறைமாத கர்ப்பிணிப் பெண்களைத் தவிர வேறு யாரையும் கிராமங்களில் காண முடிவதில்லை.

● மக்கள் நலனில் கிஞ்சித்தும் அக்கறையற்ற ஒரிசா அரசு தொடர்ந்து இப்பகுதியை புறக்கணித்தே வருகிறது. அரசின் நிவாரணப் பணித் திட்டங்களும், வேலைக்கு உணவு திட்டமும் விவசாயிகளை மேலும் சுரண்டுவதாகவே உள்ளன. அரசு நிர்ணயித்த குறைந்தபட்சக் கூலியை விடக் குறைவான ஊதியமே அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

● கிராமப்புறங்களுக்கு போக்குவரத்து வசதி அறவே இல்லை. மருத்துவமனைகளில் மருத்துவரே இல்லை. பள்ளிகளில் ஆசிரியரே இல்லை. காட்டுக் கீரைகளையும், இறந்துபோன கால்நடைகளின் மாமிசத்தையும் உண்பதால் கொள்ளை நோய் தாக்கி அவர்கள் சிறுகச்சிறுக சாகிறார்கள்.

— இத்தகவலை சமீபத்தில் கலகாந்தி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்த ஒரிசா உயர்நீதிமன்ற நீதிபதி ராதாசந்தர் கூறியுள்ளார். "அப்பகுதியின் கோரமான நிலைமை பட்டினிச் சாவுகளே இல்லை என்று பசப்பும் பட்நாயக் அரசின் முகத்தில் கரிபூசிவிட்டது. இனி அந்த மக்கள் அணிதிரண்டு போராடுவதைத் தவிர வேறுவழியில்லை" என்று வெளிப்படையாக பேட்டியளித்துள்ளார்.

இந்த அவலநிலை கலகாந்தி மாவட்டத்தில் மட்டுமின்றி, வறட்சி கோரத்தாண்டவமாடும் அண்டை மாவட்டமான போலங்கீரிலும் வேகமாகப் பரவி வருகிறது. அம்மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 21 பேர் பட்டினியால் மாண்டுபோனதாக ஒரு உள்ளூர் பத்திரிக்கை கூறுகிறது.

போலங்கீர் மாவட்டத்திலுள்ள லோய்சிங்கா கிராமத்தில் சுமித்ரா என்ற இளம் பெண், பிறந்து 15 நாளே ஆகியிருந்த தன் பச்சிளம் குழந்தையை குடிசையில் விட்டு தன் தாய் வீட்டுக்கு ஓடிப்போய் விட்டார். அவள் கணவனோ பிழைப்புதேடி மத்தியப் பிரதேசத்துக்குப் போய்விட்டான். கர்ப்பிணியாக இருந்ததால் அவளை கிராமத்திலேயே விட்டுச் சென்றிருந்தான். ஆனால் பட்டினிக் கொடுமையை அவளால் எத்தனை நாள்தான் தாங்கிக் கொள்ள முடியும்? பசி கண்ணை மறைத்தபோது பெற்ற குழந்தையே அவளுக்குப் பெருஞ்சுமையாகி விட்டது. பின்னர் குழந்தையின் அழுகுரலைக் கேட்டு அக்கம்பக்கத்திலிருந்தவர்கள் ஓடிவந்து பார்த்து, தாய் வீட்டுக்குப் போன சுமித்ராவிடம் குழந்தையை ஒப்படைத்தார்களாம். சுமித்ராவாவது பரவாயில்லை. இன்னும் பல தாய்மார்கள் மனதைக் கல்லாக்கிக் கொண்டு பிறந்த குழந்தையையே கொன்றுவிடுகின்றனர்; அல்லது 10, 20 ரூபாய்க்கு விற்றுவிடுகின்றனர் என்று அதிர்ச்சியூட்டும் செய்திகள் வருகின்றன.

கிழக்கே ஒரிசாவின் கலாகாந்தி, போலங்கீர், கோர புட் மாவட்டங்களின் பட்டினிச் சாவுகளைத் தொடர்ந்து இப்போது மேற்கில் மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களிலும், வடமேற்கில் அஸ்ஸாம் மாநிலத்திலும் பட்டினிச் சாவுகள் பெருகிவருவதாக செய்திகள் வருகின்றன. மத்தியப் பிரதேசம் ரெய்ப்பூர் மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சியாலும், நிவாரணம் எதுவும் கிடைக்காததாலும் விவசாயிகள் பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்டுள்ளதாக முன்னாள் மத்திய மந்திரியும் இந்நாள் ம.பி. முதல்வருமான மோதிலால் வோரா ஒப்புக் கொள்கிறார். அஸ்ஸாமில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கைத் தொடர்ந்து நோயாலும் பட்டினியாலும் கிராமம் கிராமமாக பட்டினிச் சாவுகள் கவ்விக்கொண்டு வருகின்றன. லட்சுமிபூர் மாவட்டத்தில் உள்ள பார்கோன், டோங்கானி பஞ்சாயத்துக்களில் மட்டும் கடந்த ஒரு மாதத்திற்குள் 10 பேர் பட்டினியால் மாண்டு போனதாக அனைத்து அஸ்ஸாம் ஆதிவாசி மாணவர் சங்கம் அரசிடம் புகார் செய்துள்ளது.

எத்தியோப்பியா உட்பட பல ஆப்பிரிக்க நாட்டு மக்களை பட்டினிச்சாவுக்குத் தள்ளிவிட்டு, பிறகு மனிதாபிமானம் - நிவாரணம் என்ற பெயரில் அங்கே ஏகாதிபத்தியவாதிகள் கஞ்சித் தொட்டிகளைத் திறந்துள்ளனர். ஆனால் சோசலிசம் பேசி ஏய்த்து நாற்பதாண்டுகளாக நாட்டை ஆளும் நேரு பரம்பரை கஞ்சித் தொட்டி திறக்கக்கூட வக்கற்று கிடக்கிறது. இது இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட விளைவு என்று கூறி சொந்த நாட்டு மக்களையே பட்டினிச் சாவுக்கு பலிகொடுத்து வருகிறது.

வரப்போகும் ஆண்டுகளில் இந்த நிலைமை மேலும் அதிகரிக்கும் என்று ஆளும் வர்க்க பொருளாதார நிபுணர்களே அஞ்சுகின்றனர். 1987ம் ஆண்டை ஒப்பிடும்போது 1988ல் உணவு உற்பத்தி பெருகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. உண்மையில் கோடைப் பருவ(ரபி) பயிர் அதிக விளைச்சலைக் கொடுத்தது. ஆனால் உணவு தானிய சேமிப்பில் அரசு அக்கறை காட்டாததால், கடந்த ஆண்டைவிட சேமிப்பு குறைந்து வெறும் 50 லட்சம் டன்கள்தான் கையிருப்பில் உள்ளது. அரசாங்கம் தனது உணவுதானிய சேமிப்பிலிருந்துதான் ரேஷன் அரிசி கொடுப்பது, வறட்சி நிவாரணம் - வேலைக்கு உணவு முதலானவற்றைச் செய்யவேண்டும். உணவுதானியக் கையிருப்பு குறைந்து போயுள்ளதால் இனி வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்ய வாய்ப்பில்லாமல் போகும்; இதனால் பட்டினிச் சாவுகள் மேலும் பெருகவே செய்யும்' என்று அவர்கள் அறுதியிடுகின்றனர்.

பாசிச இந்திரா-ராஜீவ் கும்பலின் பசுமைப் புரட்சியும், ஐந்தாண்டுத் திட்டங்களும், சட்டங்களும், தேர்தல்களும் ராஜீவின் 'விசிட்'டுகளும் நாட்டைப் பாலைவனமாகவும் பஞ்சபூமியாகவும் மாற்றியதற்குமேல் ஒரு மண்ணும் செய்யவில்லை; மண்ணைப் பொன்னாக்கிய விவசாயிகளை மௌனமாகவே கொன்றதைத் தவிர அவர்களுக்கு பாசிச கும்பல் வேறொன்றையும் செய்யவில்லை என்பதையே நாடெங்கும் பெருகிவரும் பட்டினிச் சாவுகள் நிரூபிக்கின்றன.

□ மணி



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

நான்காமாண்டு

6

1-15 பிப்ரவரி '89

உள்நாடு

தனி இதழ் : ரூ.1.50
ஆண்டு சந்தா : ரூ.36

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா : US $ 11

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

# கோஷ்டி சண்டை வலுக்கிறது! காங்கிரஸ் முடிவு நெருங்குகிறது!

நிலையான, ஊழலற்ற ஆட்சி தருவதாகச் சொல்லித் தமிழக சட்டமன்றத் தேர்தல்களின் போது புளுகி ஒட்டுப் பொறுக்கினார்கள், காங்கிரசார். அத் தேர்தல்களின் முடிவுகள் தெரிவதற்கு முன்பாகவே காங்கிரசுக்குள் குத்து வெட்டு பதவிப் போட்டி, கோஷ்டிச் சண்டை வெடித்து விட்டது. ஊழல்கள் நிருபணமாகி நாடே நாறுகிறது. பீகாரில் பிரதமரின் பினாமி முதல்வர் பகவத் ஜா ஆசாத் ஆட்சியைக் கவிழ்த்தே தீருவோம் என்று கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கின்றன எதிர்க் கோஷ்டிகள். பிரதமரின் இன்னொரு பினாமியும் எடுபிடியுமான அர்ஜுன் சிங் ஊழல்கள் நிருபிக்கப்பட்டுப் பதவியிழந்தார்; ஆனால் மாற்று முதல் மந்திரியைத் தெரிவு செய்ய முடியாமல் கோஷ்டிச் சண்டைக்குள் சிக்கித் திணறுகிறது, காங்கிரசு.

பதவி வெறியர்கள், கட்சி மாறிகள், அதிகார முறைகேடு - லஞ்ச ஊழல் பேர்வழிகள், ஒழுக்கக் கேடானவர்கள், சமூக விரோதக் கிரிமினல் குற்றவாளிகள், அரசியல் பிழைப்புவாதிகள் ஆகியோர் நிறைந்துள்ள காங்கிரசுக்குள் கோஷ்டிச் சண்டைகள் புதிதல்ல. அவை புரையோடி அழுகிப் புழுத்துப் போயுள்ளன. நெருக்கடி முற்றி வெடிக்கும் போது நாடே நாறுகிறது. அடிமுதல் முடிவரை லஞ்ச ஊழலும் புதிதல்ல. கோடி கோடியாக லஞ்ச ஊழல்கள் செய்ததாக குற்றச் சாட்டுக்கள் வந்தும் அசையாமல், வெட்கமின்றி பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கும் பாரம்பரியம் மிக்கதுதான்.

பெயருக்காகவாவது காந்தீயம், தேசீயம் ஆகிய கொள்கை சவடால் அடித்த, சுதந்திரப் போராட்டப் பெருமை பேசிய 'தியாகத் தலைமுறை'யும் இப்போது கிடையாது. பிறகு நேரு - இந்திராவுடன் சேர்ந்து கொண்ட மாஜிக் கம்யூனிஸ்டு, மாஜி சோசலிஸ்டுத் தலைமுறையும் கூட இப்போது கிடையாது. அவர்களின் பரம்பரை வாரிசுகள் பலர் இருப்பினும் ஆட்சியிலும், கட்சியிலும் ஆதிக்கம் வகிப்பவர்களும் சரி, அவர்களுக்குப் போட்டியானவர்களும் சரி பகிரங்கமான முறையில் சுயநல - காரியவாத இளைய தலைமுறையினர். எனவே பதவி வேட்டைகள், கோஷ்டி சண்டைகள் நாகுக்காக, நாகரிகப் போர்வை போர்த்தி நடக்கவில்லை. ஊழல்கள் மறைமுகமாக, இரகசியமாக நடக்கவில்லை. ஆபாசமாக, அசிங்கமாக, பகிரங்கமாக, மூர்க்கமாக நடக்கின்றன.

தேர்தல் பந்தயத்திலே வெற்றி தேடித் தரும் கவர்ச்சிகரமான தலைமையானால் அது ஏறிச் சவாரி செய்வதற்காக முதுகு கொடுக்கும் பிழைப்புவாதிகளின் கூடாரம் காங்கிரசு. இனி மேலும் தேர்தல், பதவி வேட்டைக்குப் பயன்படாது என்றால் அத்தலைமையைத் தூக்கி எறிந்துவிட்டு பசுமையான மேய்ச்சலை - பதவி கிடைக்கும் கட்சியைத் தேடி ஓடும் மந்தைகளின் தொழுவம் காங்கிரசு. 1977 தேர்தல்களில் தோல்வி நெருங்கிய போதும், காங்கிரசு பதவி இழந்த போதும் அதைப் பார்த்தோம். ஜனநாயக பூர்வமான கொள்கை முடிவு, ஜனநாயக பூர்வமாகப் பெரும்பான்மையினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமை ஆகியவற்றுக்கு காங்கிரசு கலாச்சாரத்தில் எப்போதுமே இடமில்லை. பரம்பரை வாரிசுரிமை, தனி நபர் ஆதிக்கம் ஆகியவை தான் அதன் பாரம்பரிய மரபு. எனவே, ஒவ்வொரு மாநில மந்திரிசபை நிறுவும் போதும் தனிநபர் துதிபாடும், பரம்பரை விசுவாசிகளைத் தீர்மானித்து டெல்லியிலிருந்து திணிக்கிறார்கள். வெவ்வேறு கோஷ்டிகளில் மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் பிரிந்திருப்பினும், அவர்களில் பெரும்பான்மையினர் டெல்லியின் பினாமிகளை எதிர்க்கிறார்கள். மேலும் டெல்லி பினாமி முதல்வர்கள் மாநிலங்களில் வேரும் விழுதும் இல்லாத மரங்கள், அதாவது அணிகள், உள்ளூர் தலைமை - பிரமுகர்களின் ஆதரவு இல்லாத தலைகள். அவர்களுக்கு எதிராகப் பெரும்பான்மையினர் கிளம்பி, இனிமேலும் நீடிக்கமுடியாது என்கிறபோது பொம்மைகளை நியமிப்பதும் வழக்கமாகி விட்டது.


ஃபார்ஃபாக்ஸ், போஃபார்ஸ், எச்.டி.டபிள்யூ ஆகிய ஊழல் புகார்கள் -குற்றச்சாட்டுகள் பலவும் வந்து பாசிச ராஜீவ் கும்பல் அம்பலப்பட்ட போதும் ஒரிருவர் தவிர எந்தக் காங்கிரசுப் பெருச்சாளிகளும் வெளியேறவில்லை. இருந்த மூன்றாண்டு பதவியையும் அனுபவிக்கவே விரும்பினார்கள். மேற்கு வங்கம், கேரளா, அரியானா என்று அடுத்தடுத்து தேர்தல் தோல்விகளைக் கண்ட போது அவற்றையும் தமது பதவி வேட்டைக்கு, கோஷ்டி பேரங்களுக்கே பயன்படுத்திக் கொண்டனர். தேர்தல் தோல்விகளுக்கான காரணங்களைப் பிறர் மீது சுமத்தவும், கட்சி, ஆட்சியைச் சீர்திருத்தி முடுக்கி விடுவதாக கண்துடைப்பு செய்யவும் சில மாநில முதல்வர்களை மத்தியில் மந்திரிகளாக்கியும், சில மத்திய மந்திரிகளை மாநில முதல்வர்களாக்கியும் நாடகமாடியது, பாசிச ராஜீவ் கும்பல்.

☛


படிப்பகம்

நள்ளிரவில் பதவியேற்றுக் கொண்ட இந்தப் பினாமி முதல்வர்களுக்கு எதிராக ஒவ்வொரு மாநிலத்திலும் எதிர்க் கோஷ்டிகள் அடிவெட்டு -குழிபறிப்பு வேலைகள் செய்து வந்தன. குறிப்பாக தமிழ்நாட்டுத் தேர்தல் தோல்வி அவர்களுக்குப் புதிய வெறியைக் கிளப்பி விட்டுள்ளது. பீகாரில் பகவத் ஜா ஆசாத்துக்கு எதிராக முன்னாள் முதல்வர்களான பிந்தேஷ்வரிதுபே, ஜகந்நாத் மிஸ்ரா, கவர்னர் ஜி.என்.சிங் - சபா நாயகர் சிவசந்திர ஜா ஆகியோர் தலைமையிலான மூன்று கோஷ்டிகள் கூட்டுச் சேர்ந்துள்ளன. அவர் பதவியேற்றதில் இருந்து பல நிர்வாகத் தடைகளை உருவாக்கி அரசே செயல் படாமல் முடக்கி விட்டனர். இப்போது கோஷ்டி சண்டை முற்றி கவர்னர், சபாநாயகர், சில மந்திரிகளை நீக்கிவிட்டு தனது பினாமி முதல்வரை நீடிக்கச் செய்வதற்கு பிரதமர் முயல்கிறார். ஆனால் பகிரங்கமான மோதலுக்குத் தயாராயுள்ள எதிர்க் கோஷ்டிகள் பிரதமரின் கட்டளைக்குப் பணிய மறுத்து, அவரது தூதுவர்களை அவமானப் படுத்துகின்றன.

மத்தியப் பிரதேச முதல்வர் அர்ஜுன் சிங் குடும்பத்தின் பல ஊழல்கள் பற்றி கடந்த ஐந்தாண்டுகளுக்கு மேலாக குற்றச்சாட்டுகள் உள்ளன. அப்போது நடவடிக்கை எதுவும் எடுக்காது பல பொறுப்பான பதவிகள் கொடுத்து கௌரவித்து வந்தது பாசிச ராஜீவ் கும்பல். நள்ளிரவில் முதல்வரான அர்ஜுன் சிங்குக்கு எதிராக மத்திய மந்திரியாக்கப் பட்ட மோதிலால் வோரா, மாதவராவ் சிந்தியா ஆகியோரின் கோஷ்டிகள் கூட்டுச் சேர்ந்து கவிழ்ப்பதற்கு முயன்றன. இப்போது லாட்டரி சீட்டு, ஆடம்பர மாளிகை போன்ற பல ஊழல்களில் அர்ஜுன் சிங் குடும்பத்துக்கு எதிராக நீதிமன்றத் தீர்ப்பு வந்துள்ளது. பல ஊழல்களிலும் அம்பலப் பட்டுப் போயுள்ள ராஜீவ் கும்பல் யோக்கியனைப் போல நடித்து அர்ஜுன் சிங்குக்கு பதிலாக வேறொரு கைக்கூலியை நியமிக்க முயன்றது. ஒரு வாரம், பல மத்திய மந்திரிகள் முயன்றும் தோற்றுப் போனார்கள். எனவே 11 மாதங்களுக்கு முன்பு ம.பி. முதல்வராக இருந்து மத்திய மந்திரியாக்கப்பட்ட மோதிலால் வோரா என்ற எதிர்க் கோஷ்டித் தலைவரே முதல்வராக்கப் பட்டுள்ளார். ராஜஸ்தானிலும், குஜராத்திலும் அதே போல காங்கிரசு கோஷ்டி சண்டைகள் மீண்டும் முற்றியுள்ளன.




பாசிச ராஜீவ் கும்பல் இன்னும் எவ்வளவு காலம் ஆட்சியில் நீடித்திருக்க முடியும்? அதன் தலைமையிலான காங்கிரசே இன்னும் எவ்வளவு காலம் ஒரு கட்சியாக நிலைகுலையாதிருக்க முடியும்? இந்தக் கேள்விக்குறிகள் பெரிதாகி கொண்டே போகின்றன. வானொலி, வானொளி மற்றும் கூலிப் பிரச்சாரப் பத்திரிக்கைகளை வைத்து என்னதான் மாயத் தோற்றத்தை, பொய்யான நம்பிக்கையை ஏற்படுத்தினாலும் ஆட்சி, கட்சி ஆகிய இரண்டினுடைய கடைசி நாட்கள் எண்ணப்படுகின்றன என்பது தான் எதார்த்த நிலைமை. தார்மீக ரீதியாக அவை நீடித்திருப்பதற்கான யோக்கிதையை எப்போதோ இழந்து விட்டன. ஆனால் சட்டபூர்வமாக ஆட்சியும் அமைப்பு ரீதியாகக் கட்சியும் இனிமேலும் நீடித்திருக்க முடியாது என்கிற நிலைமை நெருங்கி விட்டது. மிகச் சிறுபான்மையான ஒரு பாசிச கும்பல் சட்டவிரோதமான முறையில் அடாவடித்தனமாக மட்டுமே ஆட்சியில் நீடித்திருக்க முடியும் என்கிற நிலைமை உருவாகி வருகிறது. பொதுத் தேர்தல்களுக்கான கெடு நெருங்கி வருகின்றது. அடுத்தடுத்த தேர்தல் தோல்வினால் பாசிச ராஜீவ் கும்பலின் முகத்திலே சவக்கலை பரவி வருகிறது. பாசிசிஸ்டுகள் அமைதியான முறையில் அதிகாரத்தை இழக்கச் சம்மதிக்க மாட்டார்கள். வலுவான மக்கள் இயக்கம் எதையுமே தட்டி எழுப்பாமல் அப்படி ஒரு பிரமையை எதிர்க்கட்சிகள் உருவாக்குகின்றன. காரணம் எதிர்த் தரப்பிலும் ராமராவ், தேவிலால், கருணாநிதி போன்ற ஊழல், பாசிச பேர்வழிகள் உள்ளனர். பாரதிய ஜனதா போன்ற மதவெறி - பாசிச சக்திகள் உள்ளன. போலிக் கம்யூனிஸ்டுகள் போன்ற துரோகிகளும், ஐந்தாம் படையினரும், பாசிசத்தின் இரகசியக் கூட்டாளிகளும் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் மாற்றாக, முற்றிலும் புதிய சக்தியாக பாசிச எதிர்ப்பு மையமாக கம்யூனிசப் புரட்சியாளர்கள் உள்ளனர்.






www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# ஏகாதிபத்திய அடிவருடித்தனம்

ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், ஆக்கிரமிப்பு, அணு ஆயுத யுத்தம் அனைத்துக்கும் எதிராக புரட்சிகரமாக வாய்ச் சவடால் அடிப்பதில் இந்திய ஆளும் கும்பல்கள் என்றுமே சளைத்ததில்லை. தென்னாப்பிரிக்க நிறவெறிக்கெதிராக, பாலஸ்தீனிய விடுதலைக்கு ஆதரவாக இந்திய மந்திரிப் பிரதானிகள் முழங்காத மேடையில்லை. இதற்கு ஆமாம் சாமி போட்டுக் கொண்டு பாசிச அன்னை இந்திராவைத் தொடர்ந்து அவரது வாரிசு ராஜீவும் ஏகாதிபத்திய எதிர்ப்பு வெளியுறவுக் கொள்கைகளில் முற்போக்கு பாத்திரமாற்றுவதாக நம்பச் சொல்கின்றனர், போலிக் கம்யூனிஸ்டுகள். ஆனால் அத்தனையும் அரசியல் பித்தலாட்டமானது; உலகிலேயே ஏகாதிபத்திய அடிவருடித்தனத்திலும் விசுவாசத்திலும் நாய்க் குணத்தோடு முன்னணியில் நிற்பது இந்திய ஆளும் கும்பல்கள்தான் என்பதை சமீபத்திய இரு முக்கிய சம்பவங்கள் எடுப்பாக நிரூபித்துக் காட்டுகின்றன.

ஏற்கனவே மரணப் படுக்கையில் கிடந்த 87 வயதான ஜப்பானிய பேரரசர் ஹிரோஹிட்டோ கடந்த ஜனவரி 7ம் நாளன்று மாண்டு போனார். உடனே இந்தியா மூன்றுநாள் அரசுமுறை துக்கத்தை அறிவித்தது. தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. அரசு விழாக்கள் அனைத்தும் உடனடியாக ரத்து செய்யப்பட்டன. பம்பாயில் 'அப்னாஉத்சவ்' கலை விழாவைத் துவக்கவிருந்த ராஜீவ் இச்செய்தியை அறிந்து துடிதுடித்துப் போய் டெல்லிக்குப் பறந்தார். பிரதமரும், குடியரசுத் தலைவரும் துக்கம் தொண்டையை அடைக்க இரங்கல் செய்தியை அனுப்பினர். வானொலியில் சோக கீதங்களும், பக்திபஜனைப் பாடல்களும் ஒலிபரப்பப்பட்டன.

அதுசரி, மூன்று நாட்களுக்கு இந்தியாவே சோகக் கடலில் மூழ்குமளவுக்கு பேரரசர் ஹிரோஹிட்டோ என்ன செய்தார்?

ஜப்பானின் நிலப்பிரபுத்துவ முடியாட்சி காலத்திலிருந்து இன்றுவரை ஜப்பானின் பேரரசராக இருந்தவர்தான் ஹிரோஹிட்டோ. அவருடைய மகுடத்தின் கீழ்தான் ஜப்பானிய ஏகாதிபத்தியம் பாசிச-ஆக்கிரமிப்பு வெறிபிடித்து மிகக்கொடிய இரண்டாம் உலகப் போரைத் தொடுத்தது. ஜப்பானிய ராணுவ சர்வாதிகாரிகள் அன்று சீனாவை அடிமைப்படுத்தி அடக்கி ஆண்டனர். உலகப் போரில் முன்னேறி தென் கிழக்காசிய நாடுகளைக் கைப்பற்றி காலனியாதிக்கத்தை நிலைநாட்டினர்.

சுருக்கமாகச் சொன்னால் உலகின் படுபிற்போக்கான பாசிச-ஆக்கிரமிப்பு வெறிபிடித்த ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் மணிமுடியாக இருந்தவர்தான் பேரரசர் ஹிரோஹிட்டோ. எனவே தான் இந்திய ஆளும் கும்பல்கள் விசுவாசமாக தமது எஜமானர் மறைவுக்கு அரசுமுறை துக்கம் அறிவித்து அஞ்சலி செலுத்துகின்றன. ஆளும் வர்க்கத்தின் ஊதுகுழல் பத்திரிக்கைகளும் ஏதோ அவர் மனிதகுல முன்னேற்றத்துக்காக பாடுபட்ட மாபெரும் மனிதராகச் சித்தரித்தன.

''மக்களை பேரழிவுக்குள் தள்ளிய உலகப் போரில் ஜப்பான் தோல்வியடைந்த போது, நிபந்தனையின்றி சரணடைந்து போரை முடிவுக்குக் கொண்டு வருவதாக அவர் தைரியமாக அறிவித்தார்'' என்று பாசிச-ஆக்கிரமிப்பு வெறியரை சமாதான சிற்பியாக புகழாரம் சூட்டின. 'அவர் அரச குடும்பத்து கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து முதன் முதலாக வெளிநாடுகளுக்குப் போனார்; சாதாரண மாவு ஆலை உரிமையாளர் மகளைக் காதலித்து கடிமணம் புரிந்து புரட்சி செய்தார்' என்று தனக்கே உரித்தான மஞ்சள்-மசாலா பத்திரிக்கை பாணியில் எழுதி தனது விசுவாசத்தை காட்டியது 'ஜூனியர் போஸ்ட்'.

இன்று நேற்றல்ல; இந்திய ஆளும் கும்பல்கள் பிறவியிலேயே அடிவருடிகள்தான். அவர்களது நீண்டகால ஏகாதிபத்திய விசுவாசத்துக்குச் சாட்சியாக பிரிட்டிஷ் காலனியச் சட்டங்களே இன்றும் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. பிரிட்டிஷ் அடிமை நாடுகளின் கூட்டமைப்பான காமன்வெல்த்தில் இந்தியா தொடர்ந்து நீடிக்கிறது. எஜமானன் ஜார்ஜ் மன்னனை ரவீந்திரநாத் தாகூர் வாழ்த்துப் பாடிய பாடலே இந்தியாவின் தேசிய கீதமாக ஒலிக்கிறது. இந்த லட்சணத்தில் முதுகெலும்பில்லாத இந்த அடிவருடிகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பு எப்படிப் பட்டதாக இருக்கும்?

**ஹிரோஹிட்டோ ஜப்பானுக்கு மட்டுமா பேரரசர்? இந்திய ஆளும் வர்க்கத்துக்கும்தான்!**



மத்தியதரைக் கடலை ஒட்டியுள்ள சின்னஞ்சிறு நாடான லிபியாவின் இரு போர் விமானங்களை அக்கடற் பரப்பிலிருந்த அமெரிக்க கடற்படை விமானங்கள் கடந்த ஜனவரி 4ம் தேதியன்று சுட்டு வீழ்த்தின. எம்மைத் தாக்க வந்ததால் தற்காப்புக்காக சுட்டு வீழ்த்தினோம் என்று நியாயப்படுத்தியது அமெரிக்க ஏகாதிபத்தியம். ஆனால் இச்சம்பவத்துக்கு சில நாட்கள் முன்னர்தான், மருந்தாலை என்ற பெயரில் ஒரு ரசாயன ஆயுதத் தளவாட ஆலையை ரகசியமாக நிறுவி உலகெங்கும் லிபியா பயங்கரவாதத்தைப் பரப்புகிறது என்று குற்றம் சாட்டியது அமெரிக்கா. அதோடு, அந்த மருந்தாலையை குண்டு வீசித் தகர்ப்போம் என்று மிரட்டியது. அதன் தொடர்ச்சியாகவே இந்த அதிரடித்தாக்குதலை நடத்தியது.

லிபியா ஒரு ரஷ்ய சார்பு நாடுதான். அதன் அதிபர் கடாபி 'பச்சை (இஸ்லாமிய) சோசலிசம்' என்ற பெயரில் காட்டாட்சி நடத்தி வருவதோடு, அண்டை நாடுகளின் மீது போர் தொடுத்த ஆதிக்க வெறிபிடித்த கொடிய ராணுவ சர்வாதிகாரிதான். ரஷிய துணையோடு அவர் அமெரிக்காவை ராணுவ ரீதியில் எதிர்க்கிறார் என்பதாலேயே கடந்த எட்டாண்டுகளாக தொடர்ந்து லிபியா மீது தாக்குதல் நடத்திவருகிறது அமெரிக்க ஏகாதிபத்தியம். எல்லா ஏகாதிபத்திய நாடுகளிலும் ஏன், அமெரிக்காவிலும் கூட மருந்தாலை என்ற பெயரில் ரகசிய ரசாயன ஆயுதத் தளவாட ஆலைகள் உள்ளன. ஆனால் லிபியா ரகசியமாக ரசாயன ஆயுதங்களைத் தயாரிப்பதுதான் பயங்கரவாதத்தை தீவிரப்படுத்தும் என்றும், டிசம்பரில் பிரிட்டனில் அமெரிக்க பயணிகள் விமானம் குண்டு வெடித்து சிதறிய பேரழிவுக்கு லிபியாதான் காரணம் என்றும் அமெரிக்க ஓநாய் நியாயவாதங்களை அடுக்கிக் கொண்டு தமது அரச பயங்கரவாதத்தை லிபியா மீது ஏவிவருகின்றது.

ஆதிக்க வெறிபிடித்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இப்பயங்கரவாதத் தாக்குதலை உலகின் ஆகப் பெரும்பான்மையான நாடுகளும், கூட்டுச்சேரா நாடுகளின் தலைமைக்குழுவும் வன்மையாகக் கண்டித்தபோது, ஏகாதிபத்திய எதிர்ப்பு சூரப்புலிகளான இந்திய ஆளும் கும்பல் என்ன செய்தது? ''இச்சம்பவம் துரதிருஷ்ட வசமானது' என்று மழுப்பலாக அறிக்கை வெளியிட்டு ஒதுங்கிக் கொண்டது. அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அதன் தொண்டைக் குழியிலிருந்து ஒரு வார்த்தைகூட வெளிவரவில்லை. பிறவியிலேயே தேசியத்தன்மை அறவேயில்லாத அப்பட்டமான ஏகாதிபத்திய அடிவருடிகளிடமிருந்து -எதிர்க்க எலும்பில்லாத கோழைகளிடமிருந்து வேறு எதை எதிர்பார்க்க முடியும்? எஜமான விசுவாசத்தைத் தவிர!

□ குமார்



படிப்பகம்

www.padippakam.com

# பதவியைப்பிடித்ததும் நிறம் மாறிய பச்சோந்தி கருணாநிதி!



திராவிடக் கட்சிகளுக்கென்று ஒரு தனிப் பாரம்பரியம் உண்டு. அதிலிருந்து சிறிதும் வழுவாது மிகவும் படாடோபமான ''பந்தா''வுடன் கருணாநிதியின் முடிசூட்டு விழா நடந்து முடிந்தது. இது ஏதோ, வெற்றியின் விளைவான மகிழ்ச்சியை மக்களோடு பகிர்ந்து கொள்ளும் ''மாண்பு'' அல்ல. ஏற்கனவே கொலை, சூறையாடல், தீவைப்பு ஆகிய வன்முறை வெறியாட்டத்தில் குதித்து விட்ட உடன்பிறப்புக்கும் அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றிவிட்ட மமதையில் மிதக்கும் தலைமையும், வெற்றிக் களிப்பிலே மிதக்கும் விழா! கருணாநிதியின் வெற்றியிலே, கண்ணியத்திலே திடீரென்று நெகிழ்ந்து போயுள்ள தமிழகப் பத்திரிக்கைகளில் பலவும் அந்த விழாச் செய்திகளைச் சொல்லும்!

தமிழக சட்டமன்றத் தேர்தலோடு சேர்ந்து நாகாலாந்து, மிஜோரம் ஆகிய இரு குட்டி மாநிலங்களிலும் தேர்தல் நடந்தது. அவற்றிலே பெரும்பான்மை இடங்களைப் பிடித்து ஆட்சியைக் கைப்பற்றியது காங்கிரசு. இருந்தபோதும் காங்கிரசு கலாச்சாரப்படி சட்டுப்புட்டென்று இரவோடு இரவாக பதவியேற்புச் சடங்கை முடித்துக் கொண்டது. இது ஏதோ, எளிமையின் காரணமாக செய்வது அல்ல. அதற்குள்ளாக எம்.எல்.ஏக்கள் கட்சி தாவி, ஆட்சி அமைக்க முடியாமல் போய்விடக் கூடாது என்கிற எச்சரிக்கைதான் காரணம். ஏனெனில் எம்.எல்.ஏக்களை விலைக்கு வாங்கி மிஜோரம் மாநிலக் கட்சியின் மந்திரி சபையைக் கவிழ்த்தது, காங்கிரசு தான். நாகாலாந்திலிருந்த காங்கிரசு மந்திரிசபை கோஷ்டி சண்டை, பிளவினால் பதவியிழந்தது. அதனால்தான் அவ்விரு மாநிலங்களிலும் இடைத்தேர்தல்கள் வந்தன. அப்படி எதுவும் மீண்டும் நடந்து விடக்கூடாது என்று அஞ்சுகிறது, காங்கிரசு.

தமிழ்நாடு, நாகாலாந்து, மிஜோரம் ஆகிய மூன்று மாநிலத் தேர்தல்களின் முடிவுகள் அவற்றின் விளைவுகள் பற்றி அலசி ஆராய்வதில் ஈடுபட்டுள்ளார்கள் அரசியல் வாதிகளும், பத்திரிக்கையாளர்களும்.

காங்கிரசின் தமிழ்நாட்டுப் படுதோல்வியை சமாளிக்க, குறைத்துக் காட்ட மிஜோரம், நாகாலாந்து வெற்றிகளைப் பெரிதுபடுத்திக் காட்டுகின்றனர். அரசுப்பிரச்சார சாதனங்களும், அதன் ஆதரவாளர்களும் இங்கே பிராந்தியக் கட்சிகளைச் சாடிக்கொண்டே அங்கேயுள்ள பிராந்திய சக்திகளுடன் கூடி அரசு அதிகாரம், பணபலத்தைக் கொண்டு சாதித்ததுதான், காங்கிரசு வெற்றி. எதிர்க்கட்சிகள் சித்தரிப்பதுபோல இரு குட்டிமாநிலங்களின் முடிவுகள் என்று ஒதுக்கித் தள்ளிவிடவும் முடியாது. அங்கேயுள்ள நாகா, மிஜோ ஆகிய இருதேசிய இனங்களும் திராவிடக் கட்சிகளைப் போல வெறும் வாய்ச்சவடால் அடித்துக் கொண்டிருக்கவில்லை. இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஆயுதந்தாங்கிய போராட்டங்களை நடத்திவருகின்றன. எனவே காங்கிரசு அங்கே நடத்தும் சந்தர்ப்பவாத, இன ஒடுக்குமுறை அரசியல் நெருப்போடு விளையாடுவதைப் போன்றது. காங்கிரசு பீற்றிக்கொள்ளும் தேசிய ஐக்கியம் - ஒருமைப்பாட்டிற்கே உலைவைக்கக் கூடியது. தேசிய இனவிடுதலைப் போர்த்தீயை மேலும் உக்கிரமாகக் கிளறிவிடுவதில் முடியக்கூடியது.

தமிழ்நாட்டில் நடந்து முடிந்த தேர்தல் இந்த ஆண்டு இறுதியில் எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்களுக்கு முன்னோடி. அதிலே காங்கிரசு படுதோல்வி அடைவதையும், வி.பி.சிங் - என்.டி.ஆர் தலைமையிலான தேசிய முன்னணி வெற்றி அடையும், ஆட்சியைப் பிடிக்கும் என்பதையும் குறிக்கும் என்று எதிர்க்கட்சிகளும், அவற்றின் ஆதரவுப் பத்திரிக்கைகளும் கணிக்கின்றன. இது அரசியல் ஆருடம் மட்டுமல்ல, அவர்களின் ஆசையும்கூட. தனது தேர்தல் பிரச்சாரத்துக்கு மட்டுமே தேசிய முன்னணித் தலைவர்களைப் பயன்படுத்திக் கொண்டாரே கருணாநிதி, அதன் கொடி, சின்னம், கொள்கைகளை ஏன் முன்வைக்கவில்லை? தீராத பதவிப் போட்டியில் ஈடுபட்டு ஒருவர் காலை மற்றொருவர் வாரிவிடும் இந்த முன்னணியும் இதற்கு எதிராக போலிக் கம்யூனிஸ்டுகளும் பழைய காங்கிரசுக்காரர்களும் அமைத்துள்ள இன்னொரு முன்னணியும் தேசிய மாற்றாகுமா? இரு அணிகளும் சந்தர்ப்பவாதமாகச் சேர்ந்து அமைத்துக் கொண்ட தி.மு.க. அணிதான் இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது.

இப்படி காங்கிரசும் இல்லை; எதிர்தரப்பும் இல்லை நாங்கள் நடுநிலையானவர்கள் என்று சொல்லிக் கொண்டு சில மாஜி அரசியல்வாதிகளும், பத்திரிக்கைகளும் தமிழக தேர்தல் முடிவுகள் குறித்து பின்வரும் கருத்துக்களைச் சொல்லுகிறார்கள்.

★ எது எப்படிப் போனாலும் தமிழகத் தேர்தல்கள் நியாயம்-நேர்மையோடும், சட்டம்-ஒழுங்கு கெடாமல் அமைதியோடு, ஜனநாயகபூர்வமாகவும் நடந்து முடிந்தது. தமிழ்நாட்டு மக்களின் அரசியல் முதிர்ச்சியையும், அதிகாரிகளின் நிர்வாகத்திறனையும், அரசியல் கட்சிகளின் பெருந்தன்மையையும் பாராட்ட வேண்டும். ஜனநாயகத்தின் வெற்றியை இத்தேர்தல்கள் குறிக்கின்றன.

★ எந்தக்கட்சிக்கும் பெரும்பான்மை இல்லை என்கிற குழப்பமான நிலை ஏற்பட்டு எம்.எல்.ஏக்கள் விலைபேசப்பட்டு கட்சிதாவும் அசிங்கமான அரசியல் உருவாகவில்லை. ஏதோ ஒரு கட்சிக்குத் தெளிவான பெரும்பான்மை கிடைத்து நிலையான ஆட்சிக்கு வழி ஏற்பட்டுவிட்டது.

★ குறித்த காலத்தில் முடிவெடுத்து, உறுதியாக-துரிதமாக செயல்பட்டு அமுலாக்கும் நிர்வாகத்திறமை வாய்ந்தவர் கருணாநிதி. பிராந்திய ஆட்சியானாலும், எம்.ஜி. ஆரைப் போல தலையாட்டிக் கொண்டிராமல் மத்திய அரசுடன் கொள்கை-லட்சிய பூர்வமான அணுகு முறையை கருணாநிதி மேற்கொள்வார்.

தமிழ்நாட்டின் இரு ஆங்கில நாளேடுகள் விகடன்கள், கல்கி, இதயம் - சாவி ஆகிய பார்ப்பன ஏடுகள் உட்பட ஏறக்குறைய அனைத்துப் பத்திரிக்கைகளும் இதே கருத்தைத் தெரிவிக்கின்றன. குமுதமும்-துக்ளக்கும் பாசிச ராஜீவ் கும்பலின் பிரச்சார ஏடுகள் என்பதால் மாறுபட்ட கருத்தைச் சொல்லுகின்றன. இவர்கள் யாரானாலும் சொல்பவை அனைத்தும் பொய்யானவை, தவறானவை.

ஏனெனில் தேர்தல் விதிமுறைகள், சட்டதிட்டங்கள் அனைத்துக்கும் எதிரான சூழ்ச்சி, தந்திரம், ஜனநாயக விரோத, ஊழல்கள் நடந்துள்ளதாக இவர்களே ஒரு புறம் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆளுங்கட்சியாவதற்கு மட்டுமல்ல எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கைப்பற்றுவதற்கான போட்டியிலே கூட எம்.எல். ஏக்களை விலை பேசுவது துவங்கிவிட்டது. வெற்றிபெறுவோம் என்கிற தெம்பு வந்தவுடன், முழுமையாகத் தேர்தல் முடிவுகள் வருவதற்கு முன்பாகவே ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்பாகவே கருணாநிதி தனது



படிப்பகம்

இந்த நாடாளுமன்ற தேர்தல் ஜனநாயகத்தின் காவல்நாய் துக்ளக். அதுவே கடந்த மாத இதழில் சில உண்மைகளை ஒப்புக் கொண்டிருக்கிறது. "ஒரு எம்.எல்.ஏ.வுக்கு சட்டப்படி சம்பளமாகவும், சலுகைகளாகவும் சராசரி மாதம் ரூ.3,000 வரை கிடைக்கும். அதாவது ஐந்து ஆண்டுக்கு சட்டபூர்வ ஆதாயம் 1,80,000 ரூபாய் தான். இதற்காகப் போய் சராசரி 10 லட்சம் தேர்தல் செலவு செய்ய யாரும் முட்டாள்கள் அல்ல. பல்வேறு வழிகளிலும் எம்.எல்.ஏ. மந்திரிகளுக்கு வருமானம் கிடைப்பது வழக்கமாகிவிட்டது. அவற்றைத் தொகுத்து பார்த்தால் ஒவ்வொரு எம்.எல்.ஏ.வுக்கும் குறைந்த பட்சம் 2 கோடியிலிருந்து 70 கோடி ரூபாய் வரை வருமானம். ஒவ்வொரு மந்திரிக்கும் குறைந்தபட்சம் 90 கோடி ரூபாய் வரை வருமானம். ஐந்தாண்டுகளில் எந்தெந்த வகைகளில் இவை வருகின்றன; எதிர்க்கட்சியினருக்கும் இந்த அளவு இல்லையானாலும் கணிசமாக தேறுகிறது" என்று எழுதுகிறது துக்ளக்.

எனவே தேர்தல் சூதாட்டத்தில் குதிக்கும் ஓட்டுக் கட்சிகள் அத்தனையும் தேர்தல் விதிமுறைகளைத் துச்சமென மதித்துச் செயல்படுகின்றன. அதுவும் ஒளிவு மறைவாக இல்லை; பகிரங்கமாக, மக்கள் அனைவரும் அறிந்தே பத்திரிக்கைகள் பறைசாற்றவே எல்லாத் தில்லுமுல்லுகளும் நடக்கின்றன. அரசு எந்திரத்தைப் பயன்படுத்தக் கூடாது; சாதி-மத செல்வாக்கைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது; குறிப்பிட்ட வரம்புக்கு மேலே செலவு செய்யக்கூடாது; வாக்காளருக்கு லஞ்சம் தரும் வகையிலே நடந்து கொள்ளக்கூடாது; வாகனங்களைப் பயன்படுத்தக்கூடாது; கள்ள ஓட்டு போன்ற தில்லுமுல்லுகள் தண்டனைக் குரியவை; இத்தனையையும் மேற்பார்வையிட மத்திய கண்காணிப்புக் குழு ஜனநாயகத்தின் பேரால் உள்ள இந்த விதிமுறைகளை ஓட்டுக் கட்சிகள் எதுவும் துளியும் மதிக்கவில்லை; மாறாக மிதிக்கவே செய்தன.

வர்கள் [illegible]; சமூக விரோத கிரிமினல் குற்றங்களுக்கு அஞ்சாநெஞ்சங்கள் தளபதிகள்-மாவீரர்கள் வேட்பாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள். அதற்குக்கூட கட்சித் தலைமை லஞ்சம் வாங்கியது! இப்படி வாங்கியவர்கள், கொடுத்தவர்கள், கொடுத்து ஏமாந்தவர்களின் பட்டியல்கூட பத்திரிகைகளில் வந்தன.

லட்சம்லட்சமாக செலவு செய்வது; நீலம், கரி, காவி, இன்னும் மலிவான சாயப் பொருட்களை வைத்து ஆங்காங்கே கலர்களில் கட்சி அணிகளே எழுதுவது, ஒருசில வண்ணங்களில், 2, 3 வகை சுவரெட்டிகள், கொடிகள், பேனர்கள், சின்னங்கள்; கட்சியின் ஆதரவாளர்கள், அணிகள் கலந்துகொள்ளும் பேரணிகள் பொதுக் கூட்டங்கள் என்பதெல்லாம் பழைய கதைகள்.

கோடிகோடியாகக் கொண்டுவந்து தேர்தல் சூதாட்டத்திலே கொட்டுகிறார்கள். காங்கிரசு மட்டும் 300 கோடி ரூபாய் தமிழகத் தேர்தல் செலவுக்கென்று ஒதுக்கியிருந்தது. அது தவிர கவர்னர் ஆட்சியானதால் அதிகார முறைகேடுகளினால் செலவு செய்ததும் சேரும். கருணாநிதி கட்சியோ, எம்.ஜி.ஆர். கட்சியின் இரண்டு அணிகளோ தேர்தல் செலவுகளில் எந்தவகையிலும் குறைந்துவிடவில்லை என்று பத்திரிக்கைகள் கணிக்கின்றன. பார்த்தவர்களும் நம்புகிறார்கள். நான்கு அணிகளும் ஏறக்குறைய 1000 கோடி ரூபாய் வரை வாரி இறைத்தன.

மரபு வழி பழைய முறை பிரச்சார விளம்பர உத்திகளை மாற்றிக் கொண்டு அதிநவீன பாணிகளைக் கடைப்பிடித்தனர். தொழில் முறை ஓவியர்களை வைத்து விலை உயர்ந்த "எனாமல் பெயிண்ட்கள்" மூலம் பெரியபெரிய சுவரெழுத்துகள், விளம்பரக் கம்பெனிகளின் ராட்சத-பளை உயர "விளம்பர போர்டு"கள் மூலம் விளம்பரம். ஒரு சதுர அடிக்கு சராசரி 20 ரூபாய் வரை-பல வண்ணங்களில் எழுதினர். துணி ஆலைகளில் இருந்தே சின்னங்கள், தலைவர்கள் படங்களுடன் கூடிய கொடிகள்,

தலைவர்கள், சின்னங்கள், ஒரு "கட்-அவுட்" 20,000 ரூபாய் வரை கொடுத்து தூக்கி நிறுத்தப்பட்டன.

வழக்கமான ஒலிபெருக்கி, பொதுக் கூட்டப் பிரச்சாரங்களை விட அதிகமாக மின்னணு சாதனங்களைக் கொண்ட ஒலி, ஒளிப் பிரச்சாரம். தலைவர்களின் பேச்சு இறந்துபோன தலைவர்களின் (எம்.ஜி. ஆரின் தாய் சத்தியா உட்பட) பேச்சு, "கொள்கை"ப் பாடல்கள், அவர்கள் தோன்றும் வீடியோ படங்கள். இவைதவிர நவீன வசதிகளுடன் கூடிய வீடியோ ரதங்கள்; தலைவர்களின் ரதங்கள். ஏறக்குறைய கம்பெனி விளம்பர பாணியிலேயே எல்லாம் நடந்தன.

தேர்தல் அறிவிக்கப் பட்டதிலிருந்து மொத்தம் 10,000 வாகனங்கள்; தேர்தல் நாளன்று ஒரு ஓட்டுச் சாவடிக்கு 15 வாகனங்கள் வீதம் பறந்தன. பேரணிகள்-பொதுக் கூட்டங்களுக்கான பஸ்-லாரி-வேன்கள் இதிலே அடங்காது. சாதாரண அடிமட்ட ஊழியனுக்கு சாப்பாடு போட்டு சராசரி நாள் கூலி 50 ரூபாய் தரப்பட்டது. சாராயம், டீ-காபி, சிகரெட்டு வகையறா இதிலே அடங்காது. ஒவ்வொரு அணிக்கும் நிதிப் பொறுப்பாளர் யார், எந்தந்த நாளில் எவ்வளவு தொகை, எப்படி-யாரால் "பட்டுவாடா" செய்யப்பட்டது என்கிற விவரம் கூட பகிரங்கமானதுதான். தொகுதி, சேலை-வேஷ்டி, அரிசி, ரொக்கம், சாராயம் கொடுத்து ஓட்டர்களை விலை பேசுவதிலிருந்து, மையை அழித்து கள்ள ஓட்டுப் போடுவது வரை செய்யாத கட்சி இல்லை. சென்ற தேர்தலுக்குக் கொடுத்ததுபோல 20, 30 ரூபாய் போதாது, விலைவாசி ஏறிப் போச்சு 50, 60 என்று கொடுத்தால்தான் ஓட்டுப் போடுவோம் என்று வாக்காளர்களே பேரம் பேசும் அளவு "ஜனநாயகம்" கொடிகட்டிப் பறந்தது.

இவ்வளவும் வாக்காளர்களில் பலருக்கும் கட்சிகளுக்குள் ஒருவருக்கொருவர் தெரியும். ஜனநாயகத்தின் "காவல்"



காவல் துறையினரின் பாதுகாப்புடன் கள்ளச் சாராயம் கடத்திவந்த கார் இது. காங்கிரஸ் கொடி 'பட்டொளி' வீசிப்பறப்பதை பார்க்கலாம்.



அதே காரில் டிக்கியில் பதுங்கியுள்ள கள்ளச் சாராய மூட்டைகள். எல்லாம் தேசியச் செம்மல்(!)களின் தேவைக்கும், சேவைக்கும்தான்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

ரிக்கைகளுக்குத் தெரியும். இவ்வளவையும் தடுக்கவேண்டிய தண்டிக்க வேண்டிய பொறுப்பான அதிகாரிகளுக்குத் தெரியும். இருந்தபோதும் பெயரளவுக்குக் கண்டிப்பது கூட குறைந்து, இதெல்லாம் தேர்தல் ஜனநாயகத்தின் பிரிக்கமுடியாத -தவிர்க்க முடியாத அங்கமாக இப்போது அவர்கள் ஏற்றுக்கொண்டுவிட்டனர். ஏற்கனவே 10லிருந்து 20 சதவிகிதம் வரை கள்ள ஓட்டு போடப்படுகிறது. வாகன வசதிகள் இல்லை என்றால் 60லிருந்து 80 சதவிகிதத்தினர் ஓட்டுப் போடவே மாட்டார்கள். வாக்களருக்கு லஞ்சம் தருவது உட்பட அனைத்துத் தேர்தல் தில்லுமுல்லுகளும் தடுக்கப் படுமானால் 10 சதவிகிதம் கூட பதிவாகாது என்பதுதான் உண்மை! தேர்தல் குற்றங்களில் ஈடுபடுகிறோமோ என்கிற கூச்சமோ, அதற்காகத் தண்டிக்கப்படுவோமோ என்கிற அச்சமோ சிறிதும் இல்லாமல் ஓட்டுக் கட்சிகள் பகிரங்கமாக- தைரியமாக செயல்படுகின்றன. இதுதான் இந்திய ஜனநாயகத்தின் லட்சணம்!

இந்த நிலையில் ''தேசியக் கட்சி தோற்றுப்போனதே, பிரிவினைவாதத் திராவிடக் கட்சி ஆட்சிக்கு வந்துவிட்டதே! வள்ளல்- மனிதாபிமானி எம்.ஜி.ஆரின் வாரிசுகள் தோற்றுப்போனார்களே, ஊழல் நாயகன் மீண்டும் ஆட்சிக்கு வந்துவிட்டாரே!'' என்று வருந்துவதற்கு எதுவுமில்லை. ஏனெனில் தோற்றுப் போனவர்கள் பாசிச ராஜீவ் கும்பலும், எப்போது வேண்டுமானாலும் அதனிடம் சோரம் போகும் இரு அணிகளும் தான்!

அதேபோல ''காங்கிரசுப் பெருச்சாளிகள் ஆதிக்க வெறியர்கள், கவர்ச்சி வேடதாரிகள் ஆகியோர் தோற்றுப் போனார்கள்! கொள்கை வழி நிற்கும் கழகம், மொழி-இன உரிமை காத்திடும் தானைத்தலைவர் ஆட்சி வந்துவிட்டது!'' என்று மகிழ்ந்து போவதற்கும் எதுவும் இல்லை. ஏனெனில் கழகத்தின் -கருணாநிதியின் யோக்கியதையை எடைபோட அவர்களுடைய கடந்தகால அதிகார முறைகேடுகள், லஞ்ச ஊழல்கள், ஒடுக்குமுறைகளைக் கூட சொல்லவில்லை. அவர்கள் கிளப்பிய தேர்தல் புழுதிகூட இன்னும் அடங்கவில்லை. பதவியேற்கும் ''பந்தா'' கூட முடியவில்லை அதற்குள்ளாகவே பாசிச ராஜீவ் கும்பலின் பாதம் நோக்கிக் கும்பிடு போடத் துவங்கிவிட்டதைப் பார்த்தாலே போதும்.

தேர்தலுக்கு மூன்று நாட்களுக்கு முன்பாக, பத்திரிக்கைகளிலே ஒரு முழுப்பக்க விளம்பரம் கொடுத்தது கருணாநிதி கட்சி. அதிலே, ''ஒரு பச்சோந்தியைப் போல எங்களுடைய நிறங்களை நாங்கள் மாற்றிக் கொள்வதில்லை. எங்களுடைய சின்னம் ஒன்றுதான்! அது மாறவில்லை. நிலையானது... உதய சூரியனைப் போல!'' என்கிற வாசகங்கள் கொட்டையாக இருந்தன. அதாவது ''பச்சோந்தி நிறத்தை மாற்றிக் கொள்வதைப் போல எங்களுடைய கொள்கைகளை மாற்றிக் கொள்ள மாட்டோம்! அவை நிலையானவை'' என்கிற கருத்தில் வாசகங்கள் எழுதி ஒரு பெரிய பச்சோந்தியின் படமும் வரைந்திருந்தனர்.



தேனியில் ஒரு [illegible]

எனவே ''தி.மு.க.வுக்கு வாக்களியுங்கள்'' என்றும் கோரியிருந்தனர். மக்களும் அப்படியே வாக்களித்தனர். வாக்களித்தவர்களின் ''அழியும்''மைகூட இன்னும் அழியவில்லை. அதற்குள்ளாக கருணாநிதி தான் ஒரு பச்சோந்திதான் என்பதை காட்டிவிட்டார். நிறத்தை மாற்றிக் கொண்டார். அவரது பேச்சும் தோரணையும் மொழி-இனம் காத்திடும் வீரமும் ஆகிய எல்லாவற்றையும் உதிர்த்துவிட்டார்.

இட்டுக்கட்டவில்லை. இங்கே சில சான்றுகள் பாருங்கள்! பதவியேற்பதற்கு

ஜானகி அணி – வீரப்பனின் தேர்தல் பிரச்சாரம்: [illegible]



பேட்டி அளித்துள்ளார். அதிலே கருணாநிதி தனது நிறத்தை மாற்றிக்கொண்ட பச்சோந்தி- கொள்கையைக் கைவிடும் காரியவாதி என்பதை காட்டிக்கொண்டுவிட்டதைக் காணலாம்.

''தி.மு.க.வுக்கு எதிரான வாக்குகள் பிளவுபட்டுப் போனது உங்கள் வெற்றிக்கான காரணமாகக் கருதுகிறீர்களா?'' என்று கேட்கிறது இந்து நாளேடு. ''காங்கிரசும் ஜெயலலிதாவும் கூட்டுச் சேர்ந்திருந்தால் கம்யூனிஸ்டுக் கட்சியும் ஜானகி பிரிவு அ.தி.மு.க.வும் எங்களோடு சேர்ந்துகொள்ளும் நிலைமை உருவாகியிருக்கும்''. எம்.ஜி.ஆரின் பாசிச வக்கிர-கோமாளித்தனமான ஆட்சியைச் சாடி அதன் ஒரு பகுதி தான் ஜானகி-வீரப்பன் கும்பல் என்று கூறி வந்த கருணாநிதி, ஜானகி ஆட்சி கவிழும் போது ஆதரவு தர மறுத்த கருணாநிதி, இப்போது ஆட்சிக்கு வந்ததும், அவசியமாயிருந்தால் அதோடு கூட்டுவைத்திருப்போம் என்று பச்சோந்தி தனமாகப் பேசுகிறார் பாருங்கள்.

''இலங்கை குறித்து உங்கள் நிலைப்பாடு நன்கு தெரிந்தது தான்; ஆனால் அதை தேர்தலில் ஒரு பிரச்சினையாக வைத்து பயன்படுத்தவில்லை. வடகிழக்கு மாகாணத்தில் ஒரு தமிழர் அரசாங்கம் பதவியில் இருக்கும்போது முதல்மந்திரி என்கிற முறையில் என்ன செய்யலாம் என்பது உங்கள் யோசனை? என்று 'இந்து' கேட்டது. ''மாகாணத்தில் ஒரு தமிழர் அரசாங்கம் அமர்த்தப்பட்ட போதும் அங்கே பரவலான அதிருப்தி நிலவுகிறது. இதுபற்றி தமிழ் நாட்டு மக்களுக்குத் தெரியாது. இலங்கையில் எல்லாம் சரியாக இருப்பதாக நம்ப வைக்கும் பிரச்சாரம் இங்கே நடக்கிறது. இந்தப் பிரச்சாரத்துக்காக அரசு கட்டுப்பாட்டிலுள்ள பிரச்சார சாதனங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நாங்கள் எதிர்த்தரப்பில் இருக்கும்போது வெளியிலிருந்து எங்களுக்கு வரும் தகவல்கள் வரம்புக்குட்பட்டவை. அரசாங்கத்தில் இருப்பதால் செய்திகளை அறிவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. பேச்சுவார்த்தையின் மூலம் தமிழ் ஈழத்தில் நிரந்தர அமைதிக்கான ஒரு தீர்வு காண்பதாக எங்கள் முயற்சி இருக்கும். இந்திய அரசாங்கத்தோடு பிரச்சினை முழுவதையும் விவாதிப்பதற்கு தி.மு.க. அரசு முன் முயற்சி எடுக்கும்'' என்று மிகவும் சாதுரியமாகப் பேசுவதுபோல நடித்திருக்கிறார் கருணாநிதி!

ஈழத்திலே நடந்த மாகாணத் தேர்தல் போலியானது என்று கருணாநிதி கட்சி கூறவில்லையா? அங்கே அமைக்கப்பட்ட தமிழர்களின் பொம்மை ஆட்சியை ஒரு தமிழர் அரசாங்கமாக தி.மு.க. எப்போது அங்கீகரித்தது. அங்கே எல்லாம் சரியாக இருப்பதாகக் கூற முடியாது; பரவலான அதிருப்தி நிலவுகிறது என்பதுதான் உண்மையா? இந்தியக் கூலிப்படை ஈழத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது; இந்திய இராணுவம் அமைதிகாக்கும் படை அல்ல; மக்களைக் கொல்லும் படை கொலை, கொள்ளை, கற்ப



படிப்பகம்

www.padippakam.com

ழிப்புகளில் ஈடுபடுகிறது என்று தி.மு.க. கூற வில்லையா?

தேர்தலில் ஈழப்பிரச்சினையைப் பயன் படுத்தவில்லை என்றால், அதற்குக் காரணம் அமெரிக்க ஏகாதிபத்தியத் தூதரிடம் அப்படிச் சத்தியம் செய்து கொடுத்துள்ளார் கருணாநிதி.(1984 தேர்தலின்போது அவர் அளித்த பேட்டியே ஆதாரம்) மற்றபடி ஈழத் தமிழர் படுகொலைகளைப் படம்போட்டு, பக்கம்பக்கமாக எழுதி, நீலிக்கண்ணீர் வடித்து கருணாநிதி ஆதாயம் தேடவில்லையா? தனி ஈழம் தான் ஒரே தீர்வு என்று தீர்மானம் போடவில்லையா? எதிர்க்கட்சியாக இருந்து போதிய தகவல்கள் கிடைக்கவில்லை என்றால் இந்த முடிவுகள் பிரச்சாரங்களை எப்படி நடத்தினார்கள்? இப்போது கிடைத்துள்ள பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இன்னொரு எம்.ஜி.ஆராக மாறி ஈழத்தமிழர் முதுகிலே குத்துகிறார் கருணாநிதி என்பதுதான் உண்மை!

ஆட்சிக்கு எதிராக அப்படிச் செயல்படுவதையும் காண்கிறார். இருந்தும் மோதல் அரசியலில் நம்பிக்கை இல்லை. தவிர்க்க வேண்டும் என்பது எதற்காக? மத்தியிலுள்ள அரசு எதேச்சதிகாரமாக நடந்து கொள்கிறது; ஜனநாயக விரோதமாக நடந்து கொள்கிறது; ஊழல் ஊதாரி ஆட்சி நடத்துகிறது; மொழி-இன உரிமைகளைப் பறித்து ஒடுக்குகிறது என்று எதிர்க்கட்சியாக இருந்தவரை சாடி வந்த கருணாநிதி கட்சி பதவிக்கு வந்ததும் பச்சோந்தியாக மாறிவிடுவதை இதிலும் பாருங்கள்.

''ஆட்சிக்கு வந்த அடுத்த நாளே இப்படிக் குறைகூறுவது குற்றஞ்சாட்டுவது முறையாகாது; பொருத்திருந்து பாருங்கள்'' என்று கழக உடன்பிறப்புகளில் சிலர் சமாதானம் கூறுவார்கள். கருணாநிதி நடத்திய அரசியல், எழுதிய, பேசிய வசனங்களுக்கு உண்மையானவராய் இருந்தால், அவரும் ஒரு பச்சோந்தி அல்லவென்றால் என்ன செய்ய வேண்டும்?

☆ ஈழப் போராளிகளுக்கு எதிராகவும், இந்தி எதிர்ப்பு போராளிகளுக்கு எதிராகவும் வெடிகுண்டு சம்பவங்கள் உட்பட பல்வேறு சதிகள் செய்து அடக்கி ஒடுக்கியது மோகன்தாஸ்-தேவாரம் கும்பல். பாசிச எம்.ஜி.ஆரின் கீழ் மீனவர்கள், விவசாயிகள், கம்யூனிசப் புரட்சியாளர்கள் உட்பட பலபிரிவு மக்களையும் சுட்டுக் கொன்றது மோகன்தாஸ் - தேவாரம் கும்பல். அந்த சதிகார கொலைகார கும்பலை கைது செய்து, தண்டிக்க வேண்டும்.

☆ தமிழை ஆட்சி மொழியாக ஏற்கும்படியும்; மத்திய அரசின் - காங்கிரசின் ஏஜெண்டான கவர்னர் மற்றும் பிற அதிகாரிகளை விலக்கிக் கொள்ளும்படியும் மத்திய அரசுக்கு எதிராக போராட வேண்டும். மாநில அரசைக் கலைப்பது, 59-வது அவசர நிலை சட்டம் போன்ற கருப்புச் சட்டங்களை எதிர்த்துத் தீர்மானம் போட்டு, போராட வேண்டும்.

*கவர்ச்சி காட்ட சினிமா நடிகை; காவடி தூக்க அப்பாவி தமிழன் — கருணாநிதியின் மலிவான தேர்தல் உத்தி!*





''மத்திய அரசுடனும், கவர்னருடனும் உங்களுடைய உறவுகள் எவ்வாறிருக்கும் என்று பார்க்கிறீர்கள். மாநிலத்தின் நலன்களுக்கு ஒரு நீக்குப் போக்கான அணுகுமுறையா அல்லது ஒரு மோதும் கொள்கையா உதவும் என்று கருதுகிறார்கள்?'' என்று இந்து நாளேடு கேட்டது. ''மத்திய அரசுடனோ, கவர்னருடனோ மோதும் அரசியலில் எனக்கு நம்பிக்கையில்லை. அது அவசியம் கூட இல்லை. தி.மு.க.வுக்கு சில லட்சியங்கள் உண்டு. இதிலே மத்தியில் ஆளும் கட்சியிடமிருந்து நாங்கள் வேறுபடுகிறோம். கூடுதலான அதிகாரப் பங்கீட்டை நாங்கள் விரும்புகிறோம், அதற்காகப்பணியாற்றுவோம். அதே சமயம், நிர்வாக விவகாரங்களில் மோதல் தவிர்க்கப்படும்'' என்று ஒரு ராஜ தந்திரி போல நரித்தனமாகப் பேசுகிறார் கருணாநிதி.

இதுவரை கவர்னர் மத்திய அரசின் ஏஜெண்ட் காங்கிரசின் ஏஜெண்டாக செயல்படுகிறார் என்று இவ்வளவு காலமும் கூறிவந்தார் கருணாநிதி. ஆந்திரா, கேரளா ஆகிய மாநிலங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட

☆ ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்; இந்திய இராணுவத்தை முற்றாக விலக்கிக் கொண்டு, போர்க் குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும்; இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடக் கூடாது என்கிற சட்டமன்றத் தீர்மானம் நிறைவேற்றி அமுல்படுத்தும்படி போராட வேண்டும். சமூக விரோத கிரிமினல்குற்றவாளிகளான ஈழத்தமிழர்கள் தவிர தமிழக சிறையிலுள்ள ஈழப் போராளிகள் அனைவரையும் விடுதலைசெய்து, அவர்கள் தமது கோரிக்கைக்காகப் போராடுவதற்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். ஈழ அகதிகளுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள், கொடுமைகளை நிறுத்தி விட்டு நிவாரண ஏற்பாடுகள் செய்து தர வேண்டும். ஈழ ஆதரவு இயக்கங்களுக்கு ஆதரவான அமைப்புகளை ஒடுக்குவதை நிறுத்தி, ஜனநாயக பூர்வமாக இயங்க அனுமதிக்க வேண்டும். ஈழப் போராட்டம் தொடர்வதற்கான அனைத்து உதவிகளையும் அளிக்கும் அதே சமயம் ஈழ துரோக அமைப்புகளைத் தடைசெய்ய வேண்டும்.

☆ 4000 ஏக்கரா வரை பினாமி நிலம் வைத்துள்ள மூப்பனார் உட்பட நிலப்பிரபுக்களின் நிலங்களையும், சாராய உடையார் போன்ற எம்.ஜி.ஆரின் பினாமிகளுடைய சொத்துக்களையும் பறிமுதல் செய்ய வேண்டும். திருச்செந்தூர் நகை சரிபார்ப்பு அதிகாரி கொலை முதற்கொண்டு எம்.ஜி.ஆர். ஆட்சி அக்கிரமங்கள், அதிகார முறைகேடுகள், லஞ்ச ஊழல்களை விசாரித்துத் தண்டிக்க வேண்டும்.

இவையெல்லாம் கருணாநிதியும், அவரது கழக உடன்பிறப்புகளும் செய்து வந்த பிரச்சாரங்களின் ஒருசில அம்சங்கள் தாம்! சில சில்லரைச் சீர்திருத்தங்கள் -சலுகைகளைச் செய்து விட்டு மேற்கண்டவை போன்ற கழகம் அறிவித்த கொள்கைகளைக் காற்றிலே பறக்க விடுவார் கருணாநிதி என்கிறோம். ஏனெனில் ஓட்டு வாங்குவதற்கான பிரச்சாரம் தானே தவிர, பதவிக்கு வந்ததும் நிறத்தை மாற்றிக் கொள்ளும் பச்சோந்தி தான், அவரும் அவருடைய கழகமும்.

■

— ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com



அதிருப்தி கோஷ்டித் தலைவர் ஜெகன்னாத் மிஸ்ரா.

சபாநாயகர் சிவசந்திர ஜா

பதவி பறிபோகும் நிலையில் பீகார் முதல்வர் ஆசாத்.

கவர்னர் ஜி.என்.சிங்.

# முற்றுகிறது கோஷ்டிச் சண்டை நொறுங்குகிறது காங்கிரசுக் கூடாரம்

இந்தி பேசும் மாநிலங்களிலேயே செல்லாக் காசாகி விட்டாலும் காங்கிரசு கட்சிக்குள் கோஷ்டித் தகராறுகளும் குடுமி பிடி சண்டைகளும் என்றுமே ஓய்ந்த தில்லை.

படுகொலை, பயங்கரவாதம், சாதி மத வெறியாட்டம், மாஃபியா கும்பலின் ஆதிக்கம் நிறைந்த இருண்ட பின்தங்கிய காங்கிரசு ஆளும் மாநிலம் தான் பீகார் உ.பி.க்கு அடுத்த படியாக அதிக காங்கிரசு எம்.பி.க்களைக் கொண்ட மாநிலம். அங்கேயே காங்கிரசுக் கட்சி கலகலத்துப் போய் கிடக்கிறது. முதல்வர் ஆசாத், முன்னாள் முதல்வர் ஜெகன்னாத் மிஸ்ரா, சபாநாயகர் சிவசந்திர ஜா, கவர்னர் கோவிந்த் நாராயண் சிங் ஆகிய பதவி வெறியர்களின் நாய்ச்சண்டையால் கட்சியும் ஆட்சியும் நிலைகுலைந்துபோய் பரிகசிக்கத்தக்கதாய் மாறிவிட்டது.

டெல்லி மேலிடத்தின் கருணையால் ஏறத்தாழ 11 மாதங்களுக்கு முன் முதல்வராக நியமிக்கப் பட்டார் பகவத் ஜா ஆசாத். தனது பயங்கரவாத பாசிச ஆட்சியால் பதவி பறிபோன முன்னாள் முதல்வர் ஜெகன்னாத் மிஸ்ரா நூற்றுக்கும் மேற்பட்ட எம்.எல்.ஏக்களை தன் பின்னே திரட்டிக் கொண்டு, காங்கிரசு அதிருப்தி கோஷ்டியாக மாறி கண்ணில் விரலை விட்டு ஆட்டுகிறார். இதற்கு பக்கமேளம் வாசித்துக் கொண்டு சபாநாயகர் சிவசந்திர ஜாவும், கவர்னர் ஜி.என்.சிங்கும் ஆசாத் ஆட்சியைக் கவிழ்க்கும் வேலையில் இறங்கினர்

☆ 'பீகார் பின்னடைந்து விட்டது; தொழில் வளர்ச்சி மந்தமாகி விட்டது; மாநிலத்தின் உரிமைகள் பறிக்கப் படுகின்றன; மத்திய அரசு பீகாருக்கு போதிய நிதி ஒதுக்கவில்லை' என்று கூறிக் கொண்டு 'ஜன விகாஸ் மன்ச்' என்ற பெயரில் ஜெகன்னாத் மிஸ்ரா ஒரு தனி இயக்கத்தைத் தொடங்கி, பீகார் முழுவதும் பிரச்சாரம் செய்து கொண்டு, அதிருப்தி கோஷ்டியின் பலத்தைக் காட்டி மிரட்டினார். உடனடியாக முதல்வர் ஆசாத் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று டெல்லிக்கு முறையீடு செய்துவிட்டு, தனது கோஷ்டியே பெரும்பான்மை பலமிக்கது என்பதால் கவர்னர் தன்னையே முதல்வராக நியமிக்க வேண்டும் என்று வாதிட்டார். அதிருப்தியாளர்களின் அச்சுறுத்தலைக் கண்டு விழிபிதுங்கிய ராஜீவ், கோஷ்டிப் பூசல்களைக் கைவிட்டு அமைதியாக இருக்கும்படி புத்திமதி கூறினார் ராஜீவ் சொல்வதை அவரது வளர்ப்பு பிராணிகளே கேட்குமா என்பதே சந்தேகமாக இருக்கும் போது, பதவிவெறி பிடித்த அதிருப்தி கோஷ்டிகள் கேட்குமா என்ன?

☆ இதற்கிடையே இன்னொரு அதிருப்தி கோஷ்டியின் தலைவரான சபாநாயகர் சிவசந்திர ஜா புதிய நெருக்கடியை உருவாக்கினார். சட்ட மேலவை உறுப்பினரான (எம்.எல்.சி) ஆசாத் சட்டப் பேரவையின் தலைவராகவோ, முதல்வராகவோ இருப்பதை ஏற்க முடியாது என்று சட்ட விளக்கங்களை அடுக்கினார். ''மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏக்கள் என்னை சபாநாயகராகத் தேர்ந்தெடுத்துள்ளனர். சட்டப் பேரவையில் எம்.எல்.ஏக்களை மட்டும்தான் நான் அனுமதிப்பேன். எம்.எல்.சியாக உள்ள ஆசாத் உள்ளே நுழைய அனுமதிக்கமாட்டேன்'' என்று தமிழக இடிஅமீன் சபாநாயகர் பாண்டியனுக்கு அண்ணனாக நின்று கொக்கரித்தார், சிவசந்திர ஜா.

☆ இன்னொரு பக்கம் ஆசாத்தை எதிர்க்கும் காங்கிரசு கவர்னர் ஜி.என்.சிங், முதல்வரையோ மந்திரியையோ கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக மாநிலத்தின் ஏழு பல்கலைக் கழகங்களுக்கு புதிய துணை வேந்தர்களை நியமித்தார். ''கவர்னராக இருப்பவர் அம்மாநிலத்தில் பல்கலைக் கழகங்களின் வேந்தர் என்ற மரபுப்படி நானே துணை வேந்தர்களை நியமித்தேன். நான் யாரையும் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியமில்லை'' என்று அதிகாரத்திமிரோடு ஆட்டம் போட்டார். இதோடு கவர்னர் மாளிகையின் ஊழியர்கள் ஆசாத்தின் கையாட்களாக இருந்து அரசு ரகசியங்களைக் கடத்துகிறார்கள் என்று கூறி அனைவரையும் மாற்றிவிட்டு தன்னிச்சையாக புதியவர்களை நியமித்தார். இதில் வேடிக்கை என்னவென்றால், ஆசாத்தை பதவியிலிருந்து நீக்கச் சொல்லி பிரதமருக்கும், குடியரசுத் தலைவருக்கும் எழுதிய கடிதங்களை - அரசு ரகசியங்களை - அவரே பத்திரிக்கைகளுக்கு வெளியிட்டார்.

இக்கோஷ்டி சண்டையின் உச்சகட்டமாக புதிதாக ஒரு சட்ட நெருக்கடி ஏற்பட்டது. பீகாரில் நீண்ட காலமாக சட்டப் பேரவை செயலாளர் பதவிக்கு அரசு அதிகாரி யாரும் நியமிக்கப்படாமல் இருந்த



படிப்பகம்

துறையைச் சார்ந்த ஆறுபேரான பட்டியலைக் கொடுத்து, இவர்களில் ஒருவரை செயலாளராகவும் மற்றவரை துணைச் செயலராகவும் நியமிக்கும் படி கவர்னரிடம் கோரினார். கவர்னர் மரபுப்படி அந்தப் பட்டியலை சபாநாயகரின் பரிசீலனைக்கு அனுப்பி வைத்தார்.

ஆனால் சபாநாயகரோ, சட்டப் பேரவை செயலாளர் பதவிக்கு நீதித் துறையைச் சேர்ந்தவர்களை நியமிக்கக் கூடாது என்று 87ம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட ஒரு சட்டத் திருத்தைக் காட்டி, அதன்படி ஆசாத் பரிந்துரைத்த பட்டியலை ஏற்க முடியாது என்று வாதிட்டார். சட்டப் பேரவைச் செயலாளர் ஒரு அனுபவமிக்க ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருக்க வேண்டும் என்று விதிகளைக் காட்டி ஆசாத்தின் காலை வாறினார்.

எந்த சட்டத்தை வைத்து தமது அரசியல் எதிரிகளைப் பழிவாங்கினார்களோ, அதே சட்டத்தை வளைத்து முறுக்கி வியாக்கியானம் செய்து, ஆளும் கட்சிக்குள்ளேயே ஒருவரையொருவர் பழிவாங்கத் தொடங்கினர். இந்த கூத்துக்களைப் பார்த்து 'ஐயோ, நாடாளுமன்ற ஜனநாயக மாண்பு இப்படி நார்நாராய் கிழிகிறதே' என்று ஆளும் வர்க்க சித்தாந்தவாதிகளும் சட்டவல்லுனர்களும் புலம்புவதைத் தவிர வேறெதுவும் செய்ய முடியவில்லை.

சட்டப் பேரவைக் கூட்டத்தை ஜனவரி 25ந் தேதி கூட்ட வேண்டிய நிலையில், அதற்கு அதிகார பூர்வ பொறுப்பேற்க வேண்டிய செயலாளர் இல்லாமல் கூட்டத்தை எப்படி கூட்டுவது என்று புரியாமல், இச்சட்ட நெருக்கடியைத் தீர்க்கவும் வழி தெரியாமல் திண்டாடியது டெல்லி மேலிடம். இதற்கிடையே ஆசாத் பதவி விலகா விட்டால் ஜனவரி 25ந் தேதியன்று பீகார் சட்ட மன்றத்தில் 'மகாபாரத யுத்தம்' நடக்கும் என்று பகிரங்கமாக மிரட்டியது மிஸ்ரா கோஷ்டி.

கோஷ்டிச் சண்டைகளின் விளைவாகவும், நிர்வாகத் தடைகள் காரணமாகவும், அரசின் செயல்பாடே முடங்கிப் போய் சட்டம் - ஒழுங்கு நிலைகுலைந்து போனது. ஜெகனாபாத், ரோடாஸ் மாவட்டங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் கேள்வி முறையின்றி படுகொலை செய்யப்படும் அதே சமயம் கொலையாளிகளான சாதிவெறியர்கள் சுதந்திரமாக உலவுகின்றனர். 1988ம் ஆண்டில் மட்டும் பீகாரில் 3935 படுகொலைகள் நடந்துள்ளன. 1987ம் ஆண்டை ஒப்பிடும் போது 601 கொலைகள் அதிகமாக நடந்துள்ளதாக அரசே ஒப்புக்கொள்கிறது.

பீகாரில் நிலவும் அராஜக ஆட்சியின் உச்சகட்டமாக முதல்வர் ஆசாத்தின் மைத்துனும் இளைய மகனும் ஊட்டி வளர்க்கும் அடியாட்கள் கடந்த டிசம்பர் 17 அன்று துப்பாக்கி முனையில் ஒரு இளம் பெண்ணைப் பட்டப் பகலில் கடத்திச் சென்று கற்பழித்தனர். ஆனாலும் குற்றவாளிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. இந்த அயோக்கியத்தனத்தைக் கண்டித்தும், ஆசாத்தைப் பதவிவிலகக் கோரியும் பல

## படுமுட்டாள் ராஜீவின் அடிமுட்டாள் மந்திரி!

பாசிஸ்டுகள் அடிமுட்டாள்களாகவும் கோமாளிகளாகவும் இருக்கிறார்கள் என்றால், அவர்களின் மந்திரிப் பிரதானிகள் தவிடு தின்னும் ராஜாவுக்கு முறம் பிடிப்பவர்களாக இருக்கிறார்கள். பாசிச ராஜீவின் உள்துறை மந்திரி பூடாசிங்கின் கோட்பாட்டின்படி "இந்தியாவில் பல தேசிய இனங்கள் இல்லை; இந்தியர் என்ற ஒரே தேசிய இனம்தான் உள்ளது" அபத்தமான இந்த உளறலை, சமீபத்தில் மத்திய-மாநில உறவுகள் பற்றிய சர்க்காரியா கமிஷன் அறிக்கை மீதான விவாதத்தின் போது தேசிய வெறி போதை தலைக்கேறி திருவாய் மலர்ந்தார்.

"இந்தியா பல தேசிய இன அரசுகளைக் கொண்ட நாடு" என்று அ.தி.மு.க. எம்.பி. ஆலடிஅருணா குறிப்பிட்ட போது, "உங்கள் கண்ணோட்டம் அபாயகரமானது. இந்தியா என்ற ஒரே தேசிய இனம் தான் உள்ளது" என்று பூடாசிங் எகிறிப் பாய்ந்தார். உடனே "மார்க்சிஸ்டுகள்" இந்தியா பல தேசிய இனங்களைக் கொண்ட நாடு" என்றும் "தேசிய கீதத்தில் கூட தாகூர் பல தேசிய இனங்களைப் பற்றி கூறுகிறார்" என்றும் குறிப்பிட்டனர்.

பூடாசிங்குக்கு கோபம் பொங்கியது. "நான் எந்த விளக்கத்தையும் கேட்கத் தயாரில்லை. இந்தியாவில் இந்தியர் என்ற ஒரே தேசிய இனம்தான் உள்ளது. வேறு தேசிய இனங்களே இல்லை. அப்படி இருப்பதாகப் பேசுபவர்கள் பிரிவினைவாதிகள்" என்று சாடினார். உடனே 'மார்க்சிஸ்டுகள்' தங்களை பிரிவினைவாதிகள் என்று முத்திரை குத்திவிடுவாரே என்றஞ்சி, "நாங்கள் தேசிய ஒருமைப்பாட்டை எதிர்ப்பவர்கள் அல்ல; நமது நாடு வேற்றுமையில் ஒற்றுமை கொண்டது என்றுதான் குறிப்பிடுகிறோம்" என்று பூசி மெழுகினர்.

ஆனாலும் பூடாசிங் விடுவதாக இல்லை. "நான் அவை உறுப்பினர்களை எச்சரிக்கிறேன் பல தேசிய இனம் இருப்பதாக கூறுவது பிரிவினைவாதமானது. இப்படிப் பேசித்தான் பஞ்சாப் பற்றி எரிகிறது. அது மற்ற பகுதிகளுக்குப் பரவ அனுமதிக்க மாட்டேன். பல தேசிய இனங்கள் இருப்பதாகக் கூறுவதை உள்துறை மந்திரி என்ற முறையில் நானும், என் கட்சியும் எதிர்க்கிறோம்" என்று மிரட்டி எதிர்க்கட்சிகளின் வாயை அடைத்தார்.



தேசிய இனங்களின் மொழி -கலாச்சார உணர்வுகளையும் உரிமைகளையும் அடக்கிஒடுக்கி வரும் பாசிச காங்கிரசுக்கு இப்போது பல தேசிய இனங்கள் - வேற்றுமைகள் நிலவுவதாகக் கூறுவது கூட பிரிவினைவாதமாகத் தெரிகிறது. அப்பட்டமான தேசிய வெறிக்கு இதைவிட வேறென்ன சான்றுவேண்டும்? சுருக்கமாகச் சொன்னால், இந்தியா பல தேசிய இனங்களின் சிறைக்கூடம்; இந்தியாவை ஆளும் பாசிச காங்கிரசுக் கட்சியோ தேசிய வெறியர்களின் கூடாரம்!

வேறு மகளிர் அமைப்புகளும் அதிர்க்கட்சிகளும் போராட்டங்களை நடத்தின. அவர்களோடு சேர்ந்து கொண்டு பிரச்சினையை சூடேற்றி, ஆசாத்தை நீக்கக் கோரி டெல்லியிடம் முறையிட்டது மிஸ்ரா கோஷ்டி.

அரண்டு போன பாசிச ராஜீவ் கும்பல் அவசர அவசரமாக கவர்னரையும் சபாநாயகரையும் நிர்ப்பந்தமாக பதவி விலகச் செய்து, சட்டமன்றக் கூட்டத்தை ஒத்தி வைத்து, அதற்கிடையே அதிருப்தி கோஷ்டியினரின் கருத்துக்களைப் பரிசீலித்து புதிய முதல்வரை நியமிப்பதாக வாக்குறுதி அளித்தும் தற்காலிகமாக நெருக்கடிக்குத் 'தீர்வு' கண்டுள்ளது. பீகார் மட்டுமின்றி காங்கிரசு ஆளும் எல்லா மாநிலங்களிலும் மக்களிடமிருந்து மட்டுமின்றி அதன் கட்சியிடமிருந்தே தனிமைப்பட்டு கிடக்கிறது பாசிச ராஜீவ் கும்பல். அதிருப்தி கோஷ்டிகளின் 'கலக'த்தாலும், லாட்டரி சீட்டு மோசடியில் சிக்கிக் கொண்டதாலும் மத்தியப் பிரதேசத்தில், அர்ஜுன் சிங் முதல்வர் பதவியிலிருந்து இப்போது நீக்கப்பட்டுள்ளார். இன்னும் உ.பி.யிலும், ஒரிசாவிலும், மகாராஷ்டிராவிலும் அதிருப்தி கோஷ்டிகள் 'கலக'த்தை துவக்கக் காத்திருக்கின்றன.

நிலையான ஆட்சியைத் தருவதாக தேர்தலின் போது தமிழக மக்களிடம் பசப்பிய ராஜீவால், அவரது கட்சி ஆளும் மாநிலங்களிலேயே நிலையான ஆட்சித் தர முடியாமல் போயுள்ளது. தன் கட்சிக்குள்ளேயே தனிமைப் பட்டு வரும் பாசிச ராஜீவ் கும்பல், அதிருப்தி கோஷ்டிகளை அடிபணிய வைக்க தன் கட்சியின் மீதே முன்னிலும் கடுமையாக சர்வாதிகாரத்தை ஏவத் தயங்காது. ஆளும் கட்சிக்குள்ளும் ஆட்சிக்குள்ளும் நடக்கும் தகராறுகளும் 'கலக'மும், ராஜீவ் கும்பல் பாசிச சர்வாதிகாரத்தை நாட்டின் மீதும் மக்களின் மீதும் திணிப்பதை மேலும் விரைவுபடுத்தவே செய்யும்.

● மனோகரன்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# அசுர வளர்ச்சி பெற்று ஆதிக்கம் செலுத்தும் புதுத் தரகுமுதலாளிகள்

மனோகர் ராஜாராம் சா·ப்ரியா: கொட்டை போட்ட இந்தியத் தரகுப் பெரு முதலாளிகள் அனைவரும் மிரண்டு போய் புலம்புகிறார்கள், இப்புது தரகு முதலாளியின் அரக்கத்தனமான வளர்ச்சியைக் கண்டு! இந்தியத் தரகு அதிகார முதலாளிகளின் கூடாரத்தில் முது பெரும் கதாநாயகர்களாக விளங்கும் டாடா, பிர்லா, கோயங்கா முதலான அசுர பலம் பொருந்திய தரகுப் பெரு முதலாளிகளே யானையின் காலில் சிக்குண்ட புழுவாக உருவம் தெரியாமல் சிதைந்து போகுமளவுக்கு எடுத்த எடுப்பிலேயே மிருக பலத்தோடு இந்தியக் கூட்டுப் பங்கு கம்பெனிகளின் வட்டாரத்தில் நுழைத்திருக்கிறார் இப்புது தரகு முதலாளி. கடந்த இரண்டரை ஆண்டுகளில் இந்தியாவில் உள்ள பத்துக்கும் மேலான மிகப்பெரும் கூட்டுப்பங்கு நிறுவனங்கள் சா·ப்ரியாவின் கைகளில் அடக்கமாகிவிட்டன. விளைவு; இந்தியாவின் மிகப் பெரும் 10 தரகு முதலாளிகளின் வரிசையில் இப்போது சா·ப்ரியாவும் அணிவகுத்து நிற்கத் தொடங்கிவிட்டார்.

இந்தியாவின் மதுபான உற்பத்தியில் 20 சதவீதமும், போக்குவரத்து வாகனங்களின் டயர் உற்பத்தியில் 22 சதவீதமும் இப்போது இவரது கைக்கு வந்துவிட்டன. மின்சார மற்றும் மின்னணு சாதனங்கள், களரக இயந்திரங்கள், வண்ணப்பூச்சு (PAINTS), கட்டுமான நிறுவனங்கள், உரஉற்பத்தி-விநியோகம் என பல்வேறு மிகப்பெரும் கூட்டுப் பங்கு தொழில் நிறுவனங்கள் அனைத்திலும் இப்போது ஏகபோக ஆதிக்கம் செலுத்துவது இப்புது தரகு முதலாளிதான்.

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் இந்தியாவில் முதலீடு செய்வது என்ற முகாந்திரத்தின் கீழ் 85-ம் ஆண்டின் இறுதியில் இந்தியாவில் நுழைந்தவர்தான் மனோகர் ராஜாராம் சா·ப்ரியா. துபாயில் 155 கோடி ரூபாய் மூலதனத்தில் ஜம்போ எலக்ட்ரானிக்ஸ் என்ற பெயரில் ஜப்பான் நாட்டு சான்யோ கம்பெனியின் பொருட்களை வாங்கிவிற்கும் வியாபாரிகளான நான்கு அராபிய ஷேக்குகளுடன் ஒரு பங்குதாரராய் இருந்தவர்தான் சா·ப்ரியா. தற்போது 42 வயதாகும் சா·ப்ரியா, 73-ம் ஆண்டின் இறுதிவரை பம்பாய் லெமிங்டன் சாலையில் தன் உறவினர் ஒருவர் நடத்திவந்த ரேடியோ பழுது பார்க்கும் கடை ஒன்றில் வேலையாளாக இருந்தவர். அக்கடையில் அறிமுகமான நண்பர்கள் மூலமாக டெல்லி ஐந்து நட்சத்திர ஒபராய் ஓட்டலில் தங்கியிருந்த அராபிய ஷேக்குகளின் கையாளாக துபாய் சென்றார்.

இந்திய ஏகபோகத் தரகு முதலாளிகளின் வரிசையில் எனக்கு ஒரு இடம் கிடைக்காதா'

— சுவராஜ் பால்



இடைப்பட்ட ஆண்டுகளில் துபாய் 'ஜம்போ எலக்ட்ரானிக்ஸ்' நிறுவனத்தின் ஒரு பங்குதாரராய் மாறினார்.

பத்தாண்டுகளுக்குப் பிறகு வெளிநாட்டில் வாழும் இந்தியர் என்ற சிறப்புச் சலுகையின் கீழ் 85-ம் ஆண்டில் இந்தியாவினுள் நுழைந்தார். சென்னை -பல்லாவரத்திலுள்ள கார்டன் உட்ரோப் கம்பெனிதான் சா·ப்ரியாவின் முதல் இரை! அதன்பிறகு அடுத்தடுத்து மிகப் பெரும் கூட்டுப்பங்கு கம்பெனி ஆதிக்க வேட்டையில் இறங்கி தொடர்ச்சியாக வெற்றி பெற்றார். இந்தியாவின் மிகப் பெரிய டயர் உற்பத்தி நிறுவனமான டன்லப், மதுபான உற்பத்தி நிறுவனமான ஷாவாலஸ் ஆகிய ஏகபோக நிறுவனங்களை போட்டி தரகு முதலாளிகள் மத்தியில் மூர்க்கமான போர் நடத்தி ஆதிக்கத்தைத் தட்டிப் பறித்தார்.

இந்த இரு பெரும் ஏகபோக நிறுவனங்களைக் கைப்பற்ற எக்ஸ்பிரஸ் முதலாளி கோயங்கா, பெங்களூர் சீமைச்சாராய அதிபர் விஜய்மல்லய்யா, புதுத் தரகர் சா·ப்ரியா மூவரும் நாய்ச் சண்டையில் இறங்கினர். பொறுக்கி அரசியலில் சக்களத்தி சண்டை சூடான அரசியல் விவாதமாக மேடை ஏறியதைப் போல, இவர்கள் மூவரும் ஒருவர் மற்றவரை உண்மையான முதலாளி அல்ல என்றும், மற்றவருக்காக முதுகைக் காட்டும் தரகர் என்றும், நிதிநிலையில் போண்டியானவர் என்றும் பங்கு மார்க்கெட்டுகளிலும் பத்திரிக்கைகளிலும் புழுதி கிளப்பினர். அரசு மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் நிதி, நிர்வாக, சட்டப்பிரிவு மேலாளர்களை விலைக்கு வாங்கிய சா·ப்ரியா அவர்கள் மூலம் தனக்கு ஆதரவான பிரச்சாரத்தைக் கிளப்பிவிட்டு நாய்ச் சண்டையில் வென்றார்.



படிப்பகம்

www.padippakam.com

னிகளைக் கையகப்படுத்தியவுடன் மற்ற மூன்றாந்தர, நான்காம்தர கூட்டுப்பங்கு நிறுவனங்கள் எல்லாம் சா·ப்ரியாவின் காலடியில் மளமளவென விழத்தொடங்கின. மின்சார உபகரணங்கள் உற்பத்தியில் இந்தியாவின் மிகப்பெரிய ஏகபோக நிறுவனமான 'ஜெனிலெக்' (ஜி.இ.சி. என்ற பன்னாட்டு பகாசுர கம்பெனியின் சகோதர நிறுவனம் இது), கனரக இயந்திர உற்பத்தியில் மிகப் பெரும் ஏகபோக நிறுவனமான லார்சன் அண்ட் டோப்ரோ (எல் அண்ட் டி என்றழைக்கப்படும் இந்நிறுவனம் இரு மாதங்களுக்கு முன்புவரை, விமல் துணி ஆலை அதிபரான அம்பாணியின் வசமிருந்தது), மற்றும் இந்தியாவின் மிகப் பெரும் கட்டுமான நிறுவனமான கேமோன் இந்தியா லிமிடெட், சாலிமார் பெயிண்ட்ஸ், பால்கன் டயர்ஸ், இன்னும் பல்வேறு தொழில் நிறுவனங்களான சப்போட்டல், இன்டுடோர் ஆலிவர், மதர் அண்ட் பிளேட், ஆர்சாள் எலக்ட்ரானிக்ஸ், நிகான் எலக்ட்ரானிக்ஸ், நியூவிடியோ; மேலும், கர்நாடக அரசுக்குச் சொந்தமான மங்களூர் உரம் மற்றும் ரசாயன தொழிற்சாலை குஜராத் அரசுக்குச் சொந்தமான தொலைக்காட்சி உபகரணத் தயாரிப்பு நிறுவனம் முதலான அனைத்து கூட்டுப் பங்கு நிறுவனங்களிலும் சா·ப்ரியாவின் ஏகபோகம் ஆணிவேர், கிளைவேர், சல்லிவேர் விட்டு பூதாகரமாக வளர்ந்திருக்கிறது.

சென்ற ஆண்டு மட்டும் இந்த நிறுவனங்களின் நடந்த மொத்த விற்பனை ரூ.1100 கோடிக்கும் மேல். ஆனால்,1100 கோடி ரூபாய்க்கு அதிபதியாகி இருக்கும் சா·ப்ரியா இந்நிறுவனங்களில் எடுத்த மொத்த பங்குகளின் மதிப்போ ரூ.300 கோடிதான். இதில் 50%, அதாவது ரூ.150 கோடியை இந்திய வங்கிகளிடம் கடனாகப் பெற்றுள்ளார். மீதி 150 கோடி ரூபாயில்கூட 70 கோடி ரூபாய் இந்தியாவில் குடியேறிய பிறகு அவர் மூலதனமிட்டிருந்த இந்திய நிறுவனங்களிலிருந்து லாபமாக கிடைத்த தொகைதான். ஆக, வெறும் 80 கோடி ரூபாயை இந்தியாவில் மூலதனமிட்டு ஆண்டுக்கு1100கோடி ரூபாய்க்கு வர்த்தகம் செய்யும் கில்லாடியாக, இதர இந்திய கம்பெனிகளைக் கட்டுப்படுத்தும் ஏகபோகத் தரகு முதலாளியாக உருவானவர்தான் சா·ப்ரியா. அவர் முதலீடு செய்து அந்த 80 கோடி ரூபாய்கூட சா·ப்ரியாவின் பணம் அல்ல என்பது வெளிப்படை. ஏனெனில் 155 கோடி ரூபாய் சொத்து மதிப்புள்ள துபாய் 'ஜம்போ எலக்ட்ரானிக்ஸ்' நிறுவனத்தின் நான்கு கூட்டாளிகளில் ஒருவர்தான் இந்த சா·ப்ரியா. ஆக, வெறும் 40 கோடி ரூபாய்க்கு அதிபதியான ஒருவர் திடீரென 80 கோடி ரூபாயை இந்தியாவில் கொண்டு வந்து முதலீடு செய்கிறார் என்றால் அதை நம்புவதற்கு இந்திய மக்கள் அனைவரும் காங்கிரசுக்காரர்கள் மாதிரி மூளையை முனியாண்டி விலாசில் வாங்கியவர்களா என்ன? உண்மையில், சா·ப்ரியா என்பவர் இந்தியப் போட்டித் தரகுப் பெரு முதலாளிகளின் பினாமியாக, அல்லது பன்னாட்டு பகாசுர தேச ரகசிய உலகப் பேர்வழிகளின் பினாமியாகத் தான் இருக்கவேண்டும். இருக்கமுடியும்.

எப்படி இந்திய நாடாளுமன்ற ஜனநாயகம் பொறுக்கி அரசியல்வாதிகளின் காலடியில் தஞ்சம் புகுந்து கிடக்கிறதோ அதே போல, இந்தியாவின் பொருளாதாரமும், தொழிற்துறையும், பங்கு மார்க்கெட்டும் ரகசிய உலகப் பேர்வழிகளின் கையிலும், ஏகாதிபத்தியங்களுக்கு நாட்டையும் மக்களையும் விலைபேசும் தரகு முதலாளிகளின் கையிலும் சிக்கிச் சீரழிந்து கொண்டிருக்கிறது.

அந்நிய மூலதனத்தை ரத்தினக் கம்பளம் விரித்து வரவேற்கும் பாசிச ராஜீவின் புதிய பொருளாதாரக் கொள்கையால், ஒரு சா·ப்ரியா அல்ல ஒராயிரம் சா·ப்ரியாக்கள் வெளிநாட்டில் வாழும் இந்தியர் என்ற பெயரில் கோடிகோடியாக அந்நிய மூலதனத்துடன், சிறப்புச் சலுகைகளுடன் இந்தியாவில் மூலதனமிட்டு கொள்ளையடிக்கிறார்கள். ரகசிய ஆயுத விற்பனை. போதைமருந்து



விஜய் மல்லையா அம்பாணி, கோயாங்கா.

திடீர் தரகு முதலாளி சா·ப்ரியாவால் பங்கு மார்க்கெட் சூதாட்டத்தில் பின்னுக்குத் தள்ளப்பட்ட பெரும் தரகு முதலாளிகள்.

கடத்தல் முதலான சர்வதேச கிரிமினல் -மா·பியா கும்பல்களும், அக்கும்பல்களின் பினாமிகளும் கோடிகோடியாக தங்கள் கருப்புப் பணத்தை இந்தியாவில் கொட்டி மலிவான விலையில் இந்திய மக்களின் உழைப்பை உறிஞ்சிக் கொழுக்கின்றனர். அவர்களின் காவல்-ஏவல்நாயாகஇருக்கும்வளர்ப்புப் பிராணிகளின் கூடாரம் தான் ராஜீவின் கட்சியும் ஆட்சியும்! சா·ப்ரியாவின் திடீர் வரவும் வளர்ச்சியும் இதை தெளிவாக நிரூபித்துக் காட்டுகிறது.

நேற்று இந்துஜா, ஹீராசந்த் அம்பாணி போன்றோர் அசுரத்தனமாக வளர்ந்து இந்தியப் பங்கு மார்க்கெட்டை ஆட்டிப் படைத்தார்கள். இன்று சா·ப்ரியா வந்துள்ளார். நாளை இன்னும் ஏராளமான முகந்தெரியாத புதிய தரகு ஏகபோக முதலாளிகள் உருவாக்கப்படுவார்கள் என்பது மட்டும் நிச்சயம். இவர்களது வருகையால் இந்தியத் திருநாடு திடீர்ப் பாய்ச்சலில் 21-ம் நூற்றாண்டுக்குச் சென்றுவிடும் என்று நம்பச் சொல்கிறது பாசிச ராஜீவ் கும்பல்.

பாசிச ராஜீவின் அண்டப் புளுகை அம்பலப் படுத்தி அதன் முகத்தில் கரிபூசுவதாக உள்ளது. திடீர் தரகு முதலாளி சா·ப்ரியாவின் வருகையால் ஆண்டுக்கு 1100 கோடி ரூபாய் வர்த்தகப் புழக்கம் ஏற்பட்டது உண்மைதான். ஆனால் அது புதிதாக எந்தவொரு வேலை வாய்ப்பையும் இந்திய உழைப்பாளிக்கு ஏற்படுத்தித் தரவில்லை. ஏனெனில் சா·ப்ரியா தான் ஈட்டிய லாபத்திலிருந்து புதிதாக எந்தத் தொழிலையும் தொடங்கவில்லை. அவரது கவனம் எல்லாம் பங்கு மார்க்கெட் சூதாட்டத்தில்தான்! அவர் இந்தியாவில் நுழைந்ததே இந்த சூதாட்டத்தில் பந்தயம் கட்டி மேலும் பணம் பெருக்குவதற்குத்தான்.

இந்த சூதாட்டத்தில் வெற்றி பெறுவதற்காக, போட்டி நிறுவனங்களைப் பற்றி - அதன் நிதிநிலை, நிர்வாகத்தைப் பற்றி புரளி கிளப்பி விடுவது, தன்னுடைய நிறுவனத்தின் சந்தை பங்குகளை பினாமிகளை வைத்து, தானே பெரிய அளவில் வாங்கி அதன் உண்மை மதிப்பைப் பொய்யாக உயர்த்திக் காட்டுவது, வர்த்தக நிறுவனங்களின் பிரச்சார சாதனங்களை தனது கைக்குள் போட்டுக் கொண்டு தன்னுடைய வர்த்தகத் திறமைகளைப் பற்றி பிரமைகளை உருவாக்குவது, சமூக சேவை வட்டாரங்கள், ஆட்சியதிகார கும்பல்களிடம் தனக்கு மிகப்பெரும் நெருக்கம் இருப்பதாகக் காட்டிக் கொள்வது, ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் மாலைநேர விருந்துக்கு ஏற்பாடு செய்து பன்னாட்டு வங்கி மற்றும் உள்நாட்டு நிதிநிறுவனங்களின் மேலாளர்களுக்கு விருந்து - அன்பளிப்பு கொடுப்பது என தன் தலையைச் சுற்றி தானே ஒரு ஒளிவட்டத்தை உருவாக்கிக் கொண்டு பகட்டித் திரிந்தார் சா·ப்ரியா. இவையெல்லாம் அவர் எதிர்பார்த்த பலனை விரைவிலேயே கொடுத்தது. பங்குச் சந்தை சூதாட்டத்தில் 50 ஆண்டுகளாக முழுகி முத்தெடுத்த முதுபெரும் தரகு முதலாளிகள் எல்லாம் சா·ப்ரியாவுடன் போட்டி போட முடியாமல் பந்தயத்தில் பின்தங்கி புலம்புகின்றனர்.

இந்திய கூட்டுப் பங்கு கம்பெனிகளைக் கையகப்படுத்தும் பங்கு



படிப்பகம்

www.padippakam.com



ராஜன்பிள்ளை. திலீப் பிரமால். .கெய்தான். சேத்தியா

எதிர்வரும் காலத்தில் ஏகபோக பங்கு மார்க்கெட் சூதாட்டத்தில் வெற்றி ஈட்டத் தயாராகிவரும் தரகு முதலாளிகள்.

மார்க்கெட் சூதாட்டப் போட்டியில் 8 பெரும் தரகு முதலாளிகள் மட்டுமே உள்ளனர். ஆர்.பி.கோயங்கா, பி.எம்.கெய்தான், கே.என்.மோடி, இந்துஜா, டாடா, அம்பாணி, பிர்லா ஆகியோர் அடங்கிய இக்கூட்டத்தில் சா.்.ப்ரியா மட்டும் தான் வெற்றிக் கனியைத் தட்டிப் பறிக்கும் முதல்நபராக இருக்கிறார். ஆண்டுக்கு 2,800 கோடி ரூபாய் வர்த்தகம் செய்யும் 20 மிகப் பெரும் ஏகபோக கூட்டுப் பங்கு கம்பெனிகளில், சா.்.ப்ரியாவின் கைகளில் ஆண்டுக்கு 1100 கோடி ரூபாய்க்கு வர்த்தகம் செய்யும் 10 நிறுவனங்கள் வந்து விட்டன. விஜய் மல்லய்யா, பி.எம்.கெய்தான், ராஜன் பிள்ளை, திலீப் பிரமல் முதலான வீரியமிக்க புதுத் தரகு முதலாளிகள் எல்லாம் முதல் சுற்றிலேயே தகுதியிழந்து நிற்கின்றனர்.

'இது ஏதோ முதலாளிகளிடையே நடக்கும் போட்டோ போட்டி; பழையன கழிந்து புதுயன புகுவது போல புதிய புதிய முதலாளிகள் உருவாகிறார்கள்; இதனால் நமக்கென்ன வந்தது?' என்று இந்தியப் பாட்டாளிகள் ஒதுங்கியிருந்துவிட முடியாது. அன்னிய ஏகாதிபத்தியங்களின் பினாமியாக, சர்வதேச ரகசிய உலகப் பேர் வழிகளின் பினாமியாக உள்ளே நுழையும் புதுத் தரகு முதலாளி கள்.பங்கு மார்க்கெட் சூதாட்டத்தில் குறியாய் இருந்து படிப்படியாக ஆதிக்கத்தை நிறுவி வருகிறார்களே தவிர, புதிதாக தொழில்களைத் தொடங்குவதில்லை; வேலை வாய்ப்பை உருவாக்குவதில்லை. ஏற்கனவே உள்ள கூட்டுப் பங்கு நிறுவனங்களைக் கையகப் படுத்துவதில்தான் குறியாய் இருக்கிறார்கள். அந்நிறுவனங்களில் குறுகிய காலத்திலேயே அதிக லாபம் ஈட்டுவதற்காக நிர்வாகச் சீர்திருத்தங்கள் என்ற பெயரில் ஆட்குறைப்பு, 'களையெடுப்பு'க்களைச் செய்வது, அற்பச் சலுகைகளைக் கொடுத்து வேலைப் பளுவை அதிகரிப்பது, நவீன எந்திரங்களைப் புகுத்தி படிப்படியாக தொழிலாளிகளை வேலையை விட்டே விரட்டுவது, இன்னும், தொழிலாளிகள் ஏற்கனவே அனுபவித்து வந்த உரிமைகளைப் பறிப்பது என்ற புதிய அதிரடி நடவடிக்கைகளோடுதான் வருகிறார்கள். இப்புது தரகு முதலாளிகளின் அசுர வளர்ச்சியும் ஆதிக்கமும் இந்தியப் பாட்டாளிகளைக் கொத்தடிமைகளாக்கி நாட்டைச் சூறைவதோடு நெருக்கப் பின்னிப் பிணைந்துள்ளது. இதற்கேற்றாற் போல் நாட்டை, திட்டமிட்ட பொருளாதாரத்திலிருந்து கழற்றி தரகு முதலாளிகளின் அராஜக சந்தை விதிகளின் கொடிய கரங்களில் ஒப்படைத்தும், இம்முதலாளிகளின் நலன்களுக்காகவே ஏராளமான கருப்புச் சட்டங்களைக் கொண்டு வந்தும் ஆட்டம் போடுகிறது பாசிச ராஜீவ் கும்பல்.

புதுத் தரகு முதலாளிகளின் வருகையும் வளர்ச்சியும் ஆதிக்கமும் பெருகப் பெருக அடக்கு முறையும் சுரண்டலும் மேலம் அதிகரிக்கவே செய்யும்; ஏகாதிபத்தியங்களின் சூறையாடுவதற்கான நவீன காலனியாக நமது நாடு விரைவாக உருமாறும். பழைய, புதிய தரகு முதலாளிகளின், அன்னிய ஏகாதிபத்தியங்களின் சுரண்டலுக்கும் ஆதிக்கத்துக்கும் எதிரான, பாசிச ராஜீவ் கும்பலின் தேசத்தை அடகுவைக்கும் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு எதிரான, புதிய ஜனநாயகப் புரட்சியின் மூலதனம், தேசிய சந்தை, தேசிய தொழில் நுட்பம் ஆகியவையே இதற்கான ஒரே தீர்வாகும்.

பச்சையப்பன்

## புதிய பொருளாதாரக் கொள்கையின் 'சாதனை'!

ஒருபுறம் பஞ்சமும் பட்டினிச் சாவுகளும் தீவிரமாகி நாடே கடுகாடாகிவரும் வேளையில் மறுபுறம் தரகுப் பெருமுதலாளிகளின் சொத்துக்களும், அவர்கள் செலுத்தவேண்டிய வரிபாக்கிகளும் பூதாகரமாகப் பெருகிக் கொண்டே போகிறது.

குறிப்பாக, ஏகாதிபத்தியங்களுக்கும் அதனுடன் கூட்டுச் சேர்ந்துள்ள தரகுப் பெருமுதலாளிகளுக்கும் கஜானாவைக் காலி செய்து சலுகைகளும் மானியங்களும் அறிவித்து, பாசிச ராஜீவ் கும்பல் உருவாக்கிய புதிய பொருளாதாரக் கொள்கையால் இந்த நிலைமை தீவிரமாகிக் கொண்டே வருகிறது. பானை சோற்றைப் பதம் பார்த்தாற் போல், கடந்த நிதி ஆண்டில் மட்டும் இந்தியாவில் முதலிடம் வகிக்கும் 10 தரகுப் பெருமுதலாளிகளின் சொத்து மதிப்பு பல மடங்கு உயர்ந்து, இதை மேலும் நிரூபிக்கிறது. அதே சமயம் அவர்கள் செலுத்தவேண்டிய வரி பாக்கியும் பெருகிக் கொண்டே போகிறது. '87-ம் ஆண்டை ஒப்பிடும்போது '88-ம் ஆண்டில் முதலாளிகளின் வரி பாக்கி மேலும் உயர்ந்துவிட்டதாக மத்திய மந்திரியே ஒப்புக் கொள்கிறார். இப்பெரு முதலாளிகளின் வரி பாக்கியில் ஒரு பகுதியை வசூலித்தால்கூட அதைக் கொண்டு ஓரிசா-கலகாந்தி பட்டினிச் சாவுகளைத் தடுத்துவிட முடியும்; தினமும் குடும்பம் குடும்பமாகத் தற்கொலை செய்துகொள்ளும் ஆந்திர பருத்தி விவசாயிகளின் அவலத்தைத் துடைத்துவிட முடியும்.

இந்தியாவில் முதலிடம் வகிக்கும் 10 தரகுப் பெருமுதலாளிகளின் சொத்து மதிப்பும் - வரி பாக்கியும்:

| | | சொத்து மதிப்பு (ரூ.கோடிகளில்) | வருமானவரி, சுங்கவரி, தீர்வை பாக்கி (ரூ.கோடிகளில்) |
|---|---|---|---|
| 1. | டாடா | 4939.88 | 89.41 |
| 2. | பிர்லா | 4771.38 | 30.21 |
| 3. | ரிலையன்ஸ் | 2021.53 | 33.00 |
| 4. | J.K. சிங்கானியா | 1426.27 | 26.39 |
| 5. | தாப்பர் | 1151.48 | 5.41 |
| 6. | மபத்லால் | 1050.30 | 12.10 |
| 7. | மோடி | 860.16 | 74.02 |
| 8. | லார்சன் - டோப்ரோ | 830.56 | 1.54 |
| 9. | M.A. சிதம்பரம் | 807.50 | 16.46 |
| 10. | பஜாஜ் | 777.79 | 37.56 |



படிப்பகம்

www.padippakam.com



# சிறை அதிகாரிகளின் பகற்கொள்ளை!

அன்புள்ள ஆசிரியர் குழுவிற்கு,

*நான் தமிழ்நாடு சிறைத் துறையில் கீழ்நிலை ஊழியராக பணியாற்றி வருகிறேன். புதிய ஜனநாயகத்தின் வாசகராகவும் இருக்கின்றேன். அக்டோபர் '88 இதழில் வெளியான போலீசைத் திருத்த முடியுமா? என்ற கட்டுரையைப் படித்தேன். அதன் வரிசையில் நான் எழுதும் கட்டுரையையும் புதிய ஜனநாயகத்தில் பிரசுரித்து தமிழ் நாடு சிறைத் துறையில் பணியாற்றும் அதிகாரிகளின் முகத்திரையை கிழித்தெறிவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.*

● ● ●

தமிழ்நாடு சிறைத் துறைக்கு ஆர்.எல்.ஹண்டா ஐ.பி.எஸ்; எட்டு வருடங்களாக ஐ.ஜீயாக இருந்து 1987 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ந் தேதி ஓய்வு பெற்றார். இவர் இருந்த எட்டு வருட காலத்தில் சிறைத் துறையில் எந்த முன்னேற்றமும் காணவில்லை. சிறைத்துறைக்கு நிதித் துறையில் ஒதுக்கப்படும் நிதியை பயன்படுத்தாமல் அப்படியே 'சரண்டர்' செய்து நல்ல பெயர் எடுத்துக் கொண்டார். இவர் தலைமையின் கீழ் இருந்த தமிழ் நாட்டிலுள்ள ஒன்பது மத்திய சிறைக் கண்காணிப்பாளர்களும் தாங்கள் பதுக்கும் பணத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையை மாதாமாதம் இவருக்கு கொடுத்து வந்தனர். ஐ.ஜீ ஹண்டாவும் கிடைத்தது லாபமென எதைப் பற்றியும் கண்டுக் கொள்ளாமல் ஒய்வு பெற்றார். இதற்கு கைமாறாக ஒன்பது மத்திய சிறை கண்காணிப்பாளர்களும் சேர்ந்து ஒரு 'அம்பாசிடர்' கார் வாங்கிக் கொடுத்து தங்களது விசுவாசத்தை வெளிக்காட்டிக் கொண்டனர்.

அவருக்கு பிறகு பொறுப்பேற்ற திரு.பாலகிருஷ்ணன் ஐ.பி.எஸ்., திரு. சி.துரைராஜ் ஐ.பி.எஸ். இருவரும் தங்கள் வேலையில் ஓரளவு நேர்மையைக் கடைப்பிடித்தனர். ஊழல் திமிங்கிலங்களான ஒன்பது மத்திய சிறைக் கண்காணிப்பாளர்களும் ஒன்று சேர்ந்து, இவர்கள் இருவரையும் அடுத்த ஆறு மாதத்திற்குள் வேறு துறைகளுக்கு விரட்டியடித்து விட்டனர்.

இவர்களுக்கு பிறகு சென்னை நகர போலீசு கமிசனராக இருந்து 'ஆட்டோ' சங்கர் விவகாரத்தில் மாட்டிய ஸ்ரீபால் ஏப்ரல் '88ல் இத்துறைக்கு நியமிக்கப் பட்டார். இதன்பிறகு, மத்திய சிறைக் கண்காணிப்பாளர்களின் கொட்டம் உச்சத்தை அடைந்தது. தற்போது ஸ்ரீபாலின் கையாளாக இருப்பவர், நெருக்கடிநிலை புகழ், டி.ஐ.ஜீ. வித்தியாசகர். இவர், தமிழ்நாட்டில் உள்ள ஒன்பது மத்திய சிறைகளிலும் தனது கையாட்களை தேர்ந்தெடுத்து நியமித்துள்ளார். இந்த வலைப்பின்னல் அமைப்பால் பதுக்கலில் ஒரு பங்கு ஸ்ரீபாலுக்கும், வித்தியாசகருக்கும் கிரமமாக மாதாமாதம் சேர்ந்துவிடுகிறது.

உதாரணத்திற்கு, மதுரை மத்திய சிறையில் கண்காணிப்பாளர் என்ற பெயரில் ஒரு விஷ ஜந்து இருக்கிறது. பெயர் மீ.சுவாமிநாதன், பீ.ஏ. இவருக்கு கீழ் வேலை பார்க்கும் அதிகாரிகளுக்கே இவரிடம் பேசுவதற்கு பயம்! '88 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இச்சிறைக்கு பொறுப்பேற்ற இவரிடம், இது நாள் வரையில் ஊழியர்கள் கூட தங்கள் கோரிக்கைகளுக்காக நேரடியாகச் சென்று பேசியது கிடையாது! இவரிடம் நேரடியாக தொடர்பு வைத்துள்ள ஒரே அதிகாரி திரு. ஜி.தாஸ், பி.எஸ்.சி. என்பவர்தான். காரணம், இவர், அவரின் அக்கா மகன். அதுமட்டுமல்ல, பதுக்கலில் முக்கிய இடமான "ரேஷன் ஸ்டோர்" பொறுப்பு அதிகாரியும் இவர்தான்!

மதுரை சிறையில் மட்டும் இந்த ஊழல் திமிங்கலங்கள் மாதம் ஒன்றுக்கு சுருட்டும் தொகை ரூபாய் இரண்டு லட்சத்திற்கும் மேல் இருக்கும்! மதுரை சிறையில் உள்ள கைதிகளின் எண்ணிக்கை 2,000 பேர் ஆகும். தலைக்கு என நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் சுருட்டினால் கூட, மாதம் ஒன்றுக்கு பதுக்கும் தொகை ரூபாய் 1,20,000. இதே போல, திருச்சி சிறையில் உள்ள கைதிகள், 3,000 பேர் கோவையில் 3,000 பேர் (இங்கு கைதிகளின் நூற்பு ஆலை வருமானம் வேறு பெரிய அளவில் சுருட்டப் படுகிறது.) பாளையங்கோட்டை, சென்னை சிறைகளில் தலா, 2,000 சிறைக் கைதிகளும், வேலூர் சிறையில் 2,500 சிறைக் கைதிகளும் இருக்கின்றனர். சேலம், கடலூர், புதுக்கோட்டையில் இருக்கும் மத்திய சிறைகளில் கைதிகள் குறைவாக இருப்பதால், குறைவான வருமானம் கிடைக்கிறதாம்! ஆக, ஒரு மாதத்தில் இந்த ஒன்பது சிறைகளிலும் இக்கூட்டுக் கும்பல் அடிக்கும் கொள்ளை ரூபாய் 10 லட்சத்திற்கும் மேல்!

இந்த ஊழல் திமிங்கலங்களை ஒழிப்பது எப்படி? இதுதான் இன்று என்னைப் போன்ற பல்லாயிரக்கணக்கான கீழ் நிலை சிறை ஊழியர்களின் முன் நிற்கும் பூதாகரமான கேள்வியாகும்! இதற்கு எதிராக நாங்கள் சிறிது முணுமுணுத்தால் கூட கண்காணாத இடத்திற்கு வேலை மாற்றம் செய்யப்பட்டு குடும்பத்திலிருந்து திடீர்திடீர் என பிய்த்து எறியப்பட்டு மிரட்டப் படுகிறோம். இருந்தும் சிறைக் கைதிகளின் நியாயமான கோரிக்கைகளுடன் எங்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு, மிக விரைவில் கோடிக்கால் பூதமாக கிளம்பத்தான் போகிறோம்!


புதிய ஜனநாயகம் வாசகன்,
கீழ்நிலை ஊழியன்; சிறைத்துறை.



படிப்பகம்

www.padippakam.com

டி.வி.எஸ்:



# அநியாய வேலைநீக்கத்துக்கு எதிராக ஆர்த்தெழும் தொழிலாளர்கள்

டி.வி.எஸ் - சதர்ன் ரோடுவேஸ் நிறுவனம் தென்னிந்திய சாலை போக்குவரத்திலே முன்னணியில் நிற்கும் நிறுவனம். தென்னிந்தியா முழுவதும் பெங்களூர், விஜயவாடா, செகந்திராபாத், சென்னை, மதுரை, திருச்சி என்று பத்து மிகப்பெரும் நிர்வாகக் கிளைகளைக் கொண்டு இயங்குகிறது. 237 லாரிகளும் 52 டிரக் மற்றும் டிரெய்லர் வண்டிகளும் 14 "காமா" என்னும் நீண்ட லாரிகளும் (10 சக்கரங்களுடையது) இயங்கிக் கொண்டிருக்கிறது. அதிக பாதுகாப்பு, அதிக உத்திரவாதம், விரைவான சேவை என்ற வாக்குறுதிகளை மூலதனமாக வைத்து கோடிகோடியாக லாபம் ஈட்டும் நிறுவனம். ஆனால் அதன் உயர்வுக்காகவும் இந்த நற்பெயருக்காகவும் உழைத்த தொழிலாளர்களின் வாழ்க்கை, அவலம் மட்டுமே நிறைந்தது.

சிறுகச்சிறுக போராட்ட உணர்வு பெற்ற தொழிலாளர்கள் இன்று சிலிர்த்தெழுந்து முதல் வேலையாக நிர்வாகத்தின் கைக்கூலி காங்கிரசு கட்சி சங்கமான ஐ.என்.டி.யூ.சி.-ஐ புறந்தள்ளவிட்டு புதிய தொழிற்சங்கம் ஒன்றை உருவாக்கத் தலைப்பட்டனர். நிர்வாகத்தின் ஆட்குறைப்பு மற்றும் வேலைப் பளுவை கூட்டும் திட்டத்தை முறியடிக்க சபதமேற்றனர். தொழிலாளர்களின் ஒற்றுமை பலம் பெறுகத் தொடங்கியதும் நிர்வாகம் பல வழிகளிலும் மிரட்டியது. போராட்ட முன்னோடிகளை பழிவாங்க தனது வக்கிர புத்தியைக் கொண்டு நரித்தனமான திட்டத்தை உருவாக்கியது.

'கிரீன் வே பில்' மற்றும் 'ஹேண்டிங் ஓவர் ஷீட்' என்று இரு புதிய நிர்வாக முறைகளை கொண்டுவந்தது.

அதாவது, இன்னன்ன சரக்குகளை பெற்றுக் கொண்டேன் என்று கையொப்பமிட்டு ஓட்டுநர் ஒப்புக் கொள்வது 'கிரீன் வே பில்' என்றும், அந்த பட்டியலின்படி இறக்குமிடத்தில் சாமான்கள் இல்லாமல் போனால் ஓட்டுநர் சட்டபூர்வமாக பொறுப்பேற்றதற்கு 'ஹேண்டிங் ஓவர் ஷீட்' முறையும் நடைமுறைபடுத்தப்பட்டது.

தொழிலாளர்கள் இம்முறைகறை ஏற்க மறுத்தனர். காரணம், சரக்குகள் ஏற்றப்படும் போது சம்பந்தப்பட்ட ஓட்டுநர் உடனிருந்து எடையையும் எண்ணிக்கையும் சோதித்தறியவும் அதற்கான நேரத்தை ஓட்டுநரின் வேலை நேரத்தோடு சேர்த்து கணக்கிட்டு சம்பளம் வழங்கவும் நிர்வாகம் மறுத்தது. இதன்மூலம், பொய்யாக பல பொருட்களை ஒப்படைத்ததாக கூறி ஓட்டுநர்களை பழிவாங்கி நினைத்த நிர்வாகத்தின் திட்டம் தவிடுபொடியானது. வாலறுந்த நிர்வாகம், வெறிகொண்டு தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டியடித்தது.

20, 25 ஆண்டுகள் கம்பெனியின் வளர்ச்சிக்காக நாயாய் உழைத்த தொழிலாளர்கள் நிர்வாகத்தால் ஒரே நாளில் நாயைப் போல விரட்டியடிக்கப்பட்டனர். விலக்கப்

## மோசடியே மூலதனம்

☆ இதர சாதாரண தனியார் லாரிகளில் 12 டன் எடையுள்ள சரக்கு சென்னையிலிருந்து மதுரைக்கு கொண்டுசெல்ல கட்டணம் சராசரியாக ரூ.1200 மட்டுமே. இதில் டீசல், புரோக்கர் கமிஷன், போலீசு மாமூல் மற்றும் 'டிரைவர்' 'கிளீனர்' சம்பளமும் அடங்கும். அதே, எடைக்கும் தூரத்திற்கும் டி.வி.எஸ்.-இல் அனுப்பினால் கட்டணம் ரூ.5000.

☆ டீசலை நேரடியாக, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனிடமிருந்து ஒப்பீட்டளவில் குறைந்த விலையில் பெறுகிறது. டி.வி.எஸ். 'டயர்', உதிரி பாகங்களை, சகோதர நிறுவனங்களில் தானே தயாரிக்கிறது. புரோக்கர், போலீசு மாமூல் இல்லை. இதில் 'டிரைவர்' சேர்த்துக் கொண்டால் 5 லிட்டர் மட்டுமே கூடுதல் எரிபொருள் செலவாகும். இருந்தபோதும் அடாத கட்டணம் வாங்கி பகல் கொள்ளையடிக்கிறது டி.வி. எஸ்.

☆ வரி ஏய்ப்புக்காகவும், தொழிலாளர்களுக்கு போனசு குறைத்துக் கொடுப்பதற்காகவும் வருட முடிவில் 'மெயின்டனன்ஸ்' என்று சொல்லி ஒவ்வொரு வண்டிக்கும் டயர் முதற்கொண்டு பல பாகங்களை புதிதாய் வாங்கிப் போடுவதாக கணக்கெழுதிவிட்டு, பல கோடி ரூபாய் சுருட்டுகிறது.

☆ சரக்கு அனுப்பும் ஊரின் பெயர்களை 'கோட்' (Code) முறையில், உதாரணமாக பொள்ளாச்சிக்கு POY என்றும் பாண்டிச்சேரிக்கு PDY என்றும் எழுதுவதால் பலமுறை சரக்குகள் ஊர்மாறி சென்று விடுவதுண்டு. பிறகு, பல நாட்கள் கழிந்து உரிய இடத்திற்குப் போய்ச்சேரும். அதற்கான கட்டணங்களையும் வாடிக்கையாளர்களிடமே பிடுங்கிக் கொள்கிறது டி.வி.எஸ். மேலும் சரக்குகள் அனுப்பிய நாளிலிருந்து 45 நாட்களுக்குள் சரக்குகளை எடுக்காவிட்டால் ஏலத்தில் விற்று அதிலும் சுருட்டுகிறது டி.வி.எஸ். இந்த காலக்கெடு ஏற்கனவே 6 மாதமாக இருந்தது, குறிப்பிடத்தக்கது.

டி.வி.எஸ். பூதாகரமாக வளர்ந்திருப்பது அதன், அதிக பாதுகாப்பு, அதிக உத்திரவாதம், விரைவான சேவை என்பதில் இல்லை. மாறாக, தில்லுமுல்லு, மோசடி, அயோக்கியதனம் ஆகிய கிரிமினல் குற்றங்களே, டி.வி.எஸ்.-ன் மிகப்பெரும் மூலதனம்.



படிப்பகம்

வேலையை விட்டு நின்றுவிட்டதாக கதைகட்ட காத்திருந்த நிர்வாகத்தின் சதிக்கு எதிராகவும் திரும்பவும் வேலை கோரியும் தொடர்ச்சியாக போராடுகின்றனர். தொழிலாளர்களின் முன்முயற்சியுடன் கட்டப்பட்ட சதர்ன் ரோடுவேஸ் 'எம்ளாயீஸ் யூனிய'னைச் (SREU) சேர்ந்த தொழிலாளர்கள் திருச்சி, சென்னை, மதுரை என்று பல கிளைகளிலும் இப்போரட்டத்திற்கு ஆதரவாக திரண்டுள்ளனர். குறிப்பாக திருச்சி கிளையில் பணிபுரியும், பல்வேறு ஊர்களில் வசிக்கும் தொழிலாளர்கள், திருச்சியில் ஒரு வீடு எடுத்து மொத்தமாக தங்கி சமைத்து சாப்பிட்டுக் கொண்டு ஒற்றுமை குலையாமல் போராடுகின்றனர்.

வேலை இழந்த தொழிலாளர்கள் ஒரு புறம் இப்படி போராடிக் கொண்டிருக்கும் போதே வேலையில் இருக்கும் இச்சங்க தொழிலாளர்கள் மீதும் மூர்க்கமாக பாய்ந்து குதறுகிறது நிர்வாகம்.

○ 6 மாதத்திற்கு முன்பு உயர்த்தப்பட்ட சம்பள உயர்வை கூட இச்சங்க தொழிலாளர்களுக்கு தராமல், அவர்களை ஐ.என்.டி.யூ.சி. சங்கத்தில் சேருமாறு பகிரங்கமாக மிரட்டுகிறது.

○ எடுபிடி சங்கத்தில் இருக்கும் தொழிலாளர்களையும் விட்டுவைக்கவில்லை. வண்டியை வழியில் நிறுத்திவிட்டு சாப்பிட்டதற்காக, முதலாளி மகள் ஓட்டிச் சென்ற "L" 'போர்ட்' காரை முந்திச் சென்றதற்காக, முதலாளியின் கார் என்றும் பாராமல் அதை நிறுத்திவிட்டு தன்னுடைய வண்டிக்கு வழிகேட்டு சென்றார் என்பதற்காக, எதிர் வெய்யிலை சமாளிப்பதற்கு வண்டியில் 'சன்ஷேட்' பொருத்தச் சொல்லி வலியுறுத்தியதற்காக -இப்படி பல்வேறு அற்ப காரணங்களுக்கு பல தொழிலாளர்களை வேலையிலிருந்து வெளியேற்றியிருக்கிறது, நிர்வாகம்.

இவ்வளவு கொத்தடிமைத் தனங்களை சகித்துக் கொண்டிருக்கும் தொழிலாளிகளுக்கும் சம்பளத்தை ஒன்றும் கூட்டி கொடுப்பதில்லை. அவர்களுக்கும்., மற்ற தொழிலாளர்கள் மாதிரியே அடிப்படை சம்பளம் ரூ.170, பஞ்சப்படி ரூ.630 தான். முப்பிறவி எடுத்து 100 ஆண்டுகாலம் விசுவாசமாக வேலை செய்தாலும் இதே சம்பளம் தான். 'இன்கிரிமெண்ட்' என்ற பெயரில் ஆண்டுக்கு ரூ.4 மட்டும்தான் உயரும்.

இந்த சம்பளத்திற்கு ஓட்டுநர் என்பவர் பல அவதாரங்கள் எடுக்கவேண்டும். லாரியு செய்யும் 'கிளர்க்'காக கூடவே 'தபால்'களைக் கொண்டு செல்லும் 'தபால்கார'ராக, சரக்குகளை ஏற்றி இறக்கும் 'லோடுமேன்'களாக - இப்படி அடிக்கடி ஆயிரத்தெட்டு வேலைகளையும் கூடவே செய்யவேண்டும். சட்டம் பேசினால் உடனே சீட்டு கிழிக்கப்படும்!

இதற்கும் மேலாக நிர்வாகத்தில் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை 'தானே விரும்பி வெறியேறுவது' என்ற பெயரில் தொழிலாளர்களை மொத்தமாக கழித்து கட்டுவதும் நடக்கிறது. இப்படித்தான் '82 ஆம் ஆண்டில், 10 கிளைகளிலும் சுமார் 1400 தொழிலாளர்களை மிரட்டி, ஏமாற்றி, பேரம்பேசி வெளியேற்றியது நிர்வாகம். இத்தனை அட்டூழியங்களுக்கும், ஐ.என்.டி.யூ.சி.யுடன் சட்டப்பூர்வமாக ஒப்பந்தம் போட்டுக்கொண்டு அரங்கேற்றி வருகிறது. அரசின் தொழிலாளர் நலத்துறை முதல் ஆளுங்கட்சிகளாக இருக்கும் ஓட்டுப் பொறுக்கிகள் வரை அனைவரும் 'டி.வி.எஸ்'-ன் அயோக்கியத் தனத்திற்கு தாராள அனுமதி அளித்து எச்சில் பொறுக்குகின்றனர்.

அரசின் தொழிலுறவு சட்டங்களும் அதை அமுல்படுத்தும் அதிகாரவர்க்கமும், இன்னும் நியாயம் வழங்குவதற்காக இருப்பதாக சொல்லப்படும் நீதிமன்றமும் அரசாங்கமும் முதலாளிகளை பாதுகாக்கவே என்ற உண்மையை டி.வி.எஸ். தொழிலாளர்கள் அனுபவபூர்வமாக தெரிந்து கொண்டுவிட்டார்கள். இன்னும் பல பிரிவு உழைக்கும் மக்களும் இதை உணர்ந்து ஒன்று சேர்ந்து, மனிதத் தன்மையற்ற இந்த மிருகங்களை - அவைகளின் கூடாரங்களை அழித்தொழிக்கும் நாள் நெருங்கி வருகிறது.

— ராஜேஸ்வரன்,
திருச்சி.


வெளிவந்து விட்டது

www.padippakam.com

மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் புரட்சிப் பாடல்கள் அடங்கிய 60 நிமிட ஒலி நாடா (காசெட்)

"வசந்தத்தின் இடிமுழக்கம்"

விலை:ரூ.25

தபால் செலவு:ரூ.3/-

பணவிடைத்தாள் (மணி ஆர்டர்) மூலம் பணம் அனுப்ப வேண்டிய முகவரி:

அ.முகுந்தன்,
55, நேரு நகர்,
வில்லிவாக்கம்,
சென்னை - 600 049.


## போலிக் கம்யூனிஸ்டுகளின் பிழைப்புவாதம்

"**நா**ய் விற்ற காசு குரைக்கவா போகிறது" என்று சமயத்துக்கு தகுந்தாற்போல் சந்தர்ப்பவாதமாக மாறி, தமது கொள்கைகளை அடகுவைத்துவிட்டு பிழைப்புவாதத்தில் இறங்குவதென்பது ஓட்டுக் கட்சிகளின் பிறவித் தொழில். ஓட்டுப் பொறுக்கும் போலிக் கம்யூனிஸ்டுகளும் இதற்கு விதிவிலக்கு அல்ல.

தமிழகப் போலிக் கம்யூனிஸ்ட் கட்சிகளில் ஒன்றான 'மார்க்சிஸ்ட்' கட்சியின் அதிகாரபூர்வ கலைஇலக்கிய மாத இதழான 'செம்மல'ரின் டிசம்பர்-'88 இதழின் பின் அட்டையில் அமெரிக்க ஏகாதிபத்தியக் கூட்டுடன் தயாரிக்கப்படும் 'டபுள் கோலா' குளிர்பானத்தின் பல வண்ண விளம்பரத்தை வெட்கமின்றி வெளியிட்டுள்ளனர். எந்த ஏகாதிபத்தியம் உலக மக்களின் எதிரி என்கிறார்களோ, அதே அமெரிக்க ஏகாதிபத்தியக் கொடி பின்னணியில் ஒளிர, சோடா-ஆரஞ்சு-கோலா பாட்டில்களுடன் அந்த விளம்பரம் பளிச்சிடுகிறது. இது ஒருபுறமிருக்க, அடுத்து அவர்கள் வெளியிட்ட செம்மலர் - பொங்கல் மலரில், ஏகாதிபத்தியங்களுடன் கூட்டுச் சேர்ந்து ஓட்டச் சுரண்டும் முதலாளிகள் என்று அவர்களாலேயே சித்தரிக்கப்படும் டி.வி.எஸ். நிறுவனத்தின் ஒருபக்க விளம்பரத்தையும் சொரணையின்றி வெளியிட்டுள்ளனர்.




*செம்மலர் டிசம்பர் '88 இதழில் வெளியான விளம்பரம்*

ஏற்கனவே மக்களை ஏய்க்கும் லாட்டரிச்சீட்டு விளம்பரங்களை தமது பத்திரிக்கைகளில் வெளியிட்டுவந்த போலிகள், இன்று தமது தொழிலை மேலும் ஒருபடி முன்னெடுத்துச் சென்றுவிட்டனர். அதுசரி! ஏகாதிபத்திய எதிர்ப்பு, முதலாளித்துவ எதிர்ப்பு என்று வாய்ப்புரட்சி செய்யும் இப்போலிகளுக்கு இன்னும் எதற்கு செங்கொடி?



படிப்பகம்

www.padippakam.com

# ஆக்கிரமிப்பைத் தொடங்கியது - நேருதான்!

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த டிசம்பர் மாதம் மேற்கொண்ட சீனப்பயணத்தை ஒட்டி நீண்ட காலமாகத் தீராதிருக்கும் இந்திய-சீன எல்லைத் தகராறு, அதோடு நெருங்கிப்பிணைந்துள்ள திபேத், காஷ்மீர் ஆகிய விவகாரங்கள் முன்னுக்கு வந்துள்ளன. இப்பிரச்சினைகளில் சீனாவுக்கு எதிராக தேசிய வெறியூட்டும் வகையிலே பல பொய்யான பிரச்சாரங்கள் நமது நாட்டிலே உள்ளன. எனவே மறைக்கப்பட்ட பல வரலாற்று உண்மைகளைச் சொல்லும் பொருட்டு இத்தொடர் எழுதப்படுகிறது.

இந்தியாவுக்கும் -சீனாவுக்கும் இடையே இரு தரப்பும் ஒப்புக் கொண்ட தெளிவான, வரையறுக்கப்பட்ட எல்லை ஒரு போதும் இருந்ததே இல்லை. 1954 ஆம் ஆண்டு வரை இது தான் இந்திய அரசின் அதிகார பூர்வ நிலைப்பாடு என ஒப்புக் கொண்டுள்ளது. அதேசமயம் பிரச்சினைக்குள்ளான இந்திய - சீன எல்லையில் பல பகுதிகளைத் தமது என்று உரிமை பாராட்டி இரகசியமாக அவற்றைக் கைப்பற்றிக் கொள்ளும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டது.

வடக்கே, காஷ்மீரின் எதிர்காலம் ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு மூலம் தீர்மானிக்கப்படுவதை 1947-54 ஆகிய ஆண்டுகளில் இந்திய அரசு ஏற்றுக் கொண்டிருந்தது. எனவே பிற்காலத்தில் பிரச்சினைக்குள்ளாகிய அக்சாய் சின் பகுதியில் 1950லிருந்தே சீன இராணுவ நடமாட்டம் பற்றி அறிந்திருந்தும் இந்திய அரசு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. சிங்கியாங் மாநிலத்திலிருந்து அக்சாய் சின் வழியே சீன இராணுவப் பிரிவுகள் திபேத்தின் தலைநகர் போய் வருவதாக அங்கேயுள்ள இந்திய முகவர் எழுதியுள்ளார் (ஸ்டேட்ஸ்மேன் நாளேடு 1950 நவ.15). "அக்சாய் சின் பகுதி வழியே லாசாவுக்கும் சிங்கியாங் மாநிலத்துக்கும் மணல் பாதை அமைப்பதற்கு சீனா முயலுகிறது என்று அறிந்தும் 1954 வரை அதைப் பற்றி இந்திய அரசு கண்டுகொள்ளவில்லை. (எஸ்.எஸ்.கேரா எழுதிய இந்தியாவின் எல்லை பிரச்சினைகள் பக்.157). இப்போது இந்தியா உரிமை கொண்டாடும் லடாக் பிராந்தியத்திலுள்ள புத்த மதத் தலைமை மதகுரு குஷாக் பகோலா 1952லேயே திபேத்துடன் அரசியல் ரீதியில் லடாக் இணைவதை இறுதித் தீர்வாக மேற்கொள்வோம் என்று எச்சரித்திருக்கிறார்." (ஜோசப் கோர்பெல் எழுதிய காஷ்மீரில் ஒரு ஆபத்து பக்.230-233).

மத்திய எல்லையைப் பொறுத்தவரை, 1926இல் ஒரு எல்லைக் கமிஷன் அமைக்கப்பட்டது. அதிலே இப்போது இந்தியாவிலுள்ள தெராய்-கோர்வால் பகுதி, திபேத் மற்றும் இந்திய அரசுப் பிரதிநிதிகள் பங்கேற்றனர். தெராய்-கோர்வால் பகுதியில் உள்ள "நிலாங்" என்னுமிடத்தில் அந்தக் கமிஷன் கூடியது. ஆனால் முடிவான ஒப்பந்தம் ஏதுமின்றிக் கலைந்தது.

1911 சிம்லா ஒப்பந்தப்படி மக்மகோன் கோடு தான் வடகிழக்கே இந்திய-சீன எல்லை என்று இந்திய அரசு உரிமை பாராட்டி வருகிறது. ஆங்கிலேய காலனிய அரசுக்கும் திபேத்துக்கும் இடையிலானதாகக் கூறப்படும் இந்த ஒப்பந்தத்தை திபேத்தின் மத்திய அரசான சீனா ஒப்புக் கொண்டதே இல்லை. எனவே தான் 1954ஆம் ஆண்டு வரையிலான இந்தியாவின் அதிகாரபூர்வமான பூகோள வரைபடத்திலும் இம்மூன்று எல்லைகள் தெளிவுபடுத்தப்படாதவை, வரையறுக்கப் படாதவை என்றே இருந்தன. மத-கலாச்சார, வியாபார சலுகைகள் சிலவற்றைப் பெற்றுக் கொண்டு, திபேத்தின் மீது சீனாவுக்குள்ள மைய அரசு உரிமையை ஏற்கும் ஒப்பந்தத்தில் 1954இல் கையொப்பமிட்டதன் மூலம் 1911 சிம்லா ஒப்பந்த அடிப்படையிலான உரிமையை இந்திய அரசு கைவிட்டதாகிறது.

ஆனால் 1954 ஒப்பந்த மை உலரும் முன்பே இந்திய வெளி விவகாரத் துறை, இராணுவம் மற்றும் உள்விவகார -போலீசு -துறை ஆகியவற்றுக்கு நேரு ஒரு இரகசிய சுற்றறிக்கை அனுப்பினார். "சீனா, திபேத்துடனான நமது உறவுகளில் ஒரு புதிய துவக்கப் புள்ளியாக ஒப்பந்தம் அமைகிறது என்று அந்தச் சுற்றறிக்கையில் நேரு விவரிக்கிறார். நமது கொள்கை மற்றும் சீனாவுடனான ஒப்பந்தம் ஆகியவை காரணமாக நமது வடக்கு எல்லை உறுதியானது, நிச்சயமானது என்று கருதப்பட வேண்டும், அதன் மீது எந்தவொரு விவாதத்தையும் துவங்குவதற்கு யாரையும் அனுமதிக்கக் கூடாது என்பதை வலியுறுத்தினார். "எல்லைப்புறம் நெடுகிலும், குறிப்பாக எங்கெல்லாம் அவசியம் என்று கருதப்படுகிறதோ அங்கெல்லாம் ஒரு சோதனைச் சாவடிகளின் தொகுதியை நிறுவிவிட வேண்டும்" என்று நேரு கட்டளையிட்டிருந்தார்.

இந்த இரகசிய சுற்றறிக்கையோடு முற்றிலும் புதிய இந்திய பூகோள வரைபடமும் அனுப்பப்பட்டது. அதாவது 1954 ஜூலைக்கு முந்திய அதிகாரபூர்வ வரைப மக்மகோன் எல்லைக்கோடு "வரையறுக்கப்படவில்லை" என்றும் குறிப்பிடப் பட்டிருந்தன. புதிய வரைபடங்களில் அவற்றை அழித்து விட்டு பிரச்சினைக்குள்ளான பகுதி முழுவதையும் இந்தியாவுக்குள் காட்டக்கூடிய தெளிவான எல்லைக் கோட்டை வரைந்து கொண்டனர். இரு நாடுகளுக்கிடையே பேசித் தீர்க்க வேண்டியிருந்த எல்லைப் பிரச்சினையை ஒரு தலைப்பட்சமாக வரைபடங்களில் மட்டுமே மாற்றிக் கொண்டது. புதிய வரைபடங்களின்படி காஷ்மீரின் காரகோரம் மலைக் கணவாய்க்குக் கிழக்கே தொடங்கி வடகிழக்கில் கியூன்லுன் மலை வரை அக்சாய்சின் பிராந்தியம் முழுவதும் இந்தியாவுக்குள் அடங்கும்.

1954 ஜூலையில் நேரு இரகசிய சுற்றிக்கை மூலம் கட்டளையிட்வாறு வடகிழக்கிலும், மத்தியிலுமான எல்லையில் மட்டும் சோதனைச் சாவடிகளை நிறுவி எல்லையை முன் தள்ளும் வேலையை இராணுவம் மேற்கொண்டது. வடக்கே அக்சாய்சின் பிரதேசத்தில் அவ்வாறு செய்யவில்லை. "எப்போதாவது ரோந்துக் குழுக்களை அனுப்பலாம், மற்றபடி அந்தப் பகுதியில் சாவடிகளை நிறுவிக் காக்கும் நிலையில் நாம் இல்லை; ...இந்தப் பிரதேசத்திலிருந்து சீனர்களை வெளியேற்றுவது சிரமமானது என்பது தான் இராணுவத்தின் கருத்தாகும். எவ்வாறாயினும் இராணுவம் அந்த முயற்சியை மட்டுமே செய்வதாக இருந்தது. ஏனெனில் "லே"-யில் அதற்குக் கிடைக்கும் வாய்ப்பு வசதிகள் குறைவு; "லே"-யில் இருந்து அந்தப் பிரதேசத்துக்கான சாலைப் போக்குவரத்து தொடர்பு எதுவும் இல்லை." (உளவுத் துறை இயக்குநர் பி.என்.முல்லிக் எழுதிய நேருவோடு எனது சில ஆண்டுகள் பக்:201).

1951 இல் திபேத்தியப் பிரதிநிதிகளுடன் சீன அரசு ஒப்பந்தம் செய்து கொண்டதும் எல்லையை "சர்வே" எடுக்கும் பணியைத் தொடங்கி விட்டது. அக்சாய்சின் பகுதி மூலமாகச் சாலை அமைக்கும் பணியையும் துவங்கியது. இதை அறிந்தும் கூட, 1956-57இல் சீனப் பிரதமர் சௌ-என்-லாயை இந்தியப் பிரதமர் நேரு நேரில் சந்தித்தபோதும்கூட ஆட்சேபம் தெரிவிக்கவில்லை. அந்தச் சந்திப்பின் போதும் வடகிழக்கு எல்லைப் பிரச்சினை குறித்தே அவர்கள் பேசினர். பர்மா-சீனா எல்லைப் பிரச்சினையில் மக்மகோன் கோட்டை எல்லையாக சீனா ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் அதன் தொடர்ச்சியாக இந்திய-சீனா எல்லையிலும் அதை ஏற்று கொள்ளும் என்ற நம்பிக்கையில் இருப்பதாக நேரு கூறி வந்தார்.

"அக்சாய்சின் பிராந்தியத்தில் சாலை அமைக்கப்படுவது குறித்து 1951 முதல் 1957-இல் அது அதிகாரபூர்வமாகத் திறந்து விடும்வரை நம்மிடம் போதுமான தகவல்கள் இருந்தன. இந்த சாலை குறித்து இராணுவத் தலைமையகமோ, வெளிவிவகாரத் துறையோ இந்த ஆண்டுகள் முழுவ


படிப்பகம்

[illegible]
ரத்து முழு வீச்சில் பெரும் அளவுக்கு நடக்கும் போது மட்டுமே ஏதோ கொஞ்சம் கவனம் திரும்பியது. அப்போதும் கூட அது ஏதோ சில்லரைத் தொந்தரவு ஏற்படுத்தும் விவகாரம்; நமது பாதுகாப்பைப் பாதிக்கக் கூடியது அல்ல என்றே கருதப்பட்டது'' என்கிறார் உளவுத் துறை இயக்குனர் பி.என். முல்லிக் (டை பக்.199).

ஆகவே, சீனா, எல்லைப்புற ''சர்வே'' எடுப்பது அறிந்தும், சாலை அமைத்து பெருமளவு போக்குவரத்தும் இராணுவ நடமாட்டமும் துவங்கி நடப்பதை அறிந்தும் இந்திய அரசு பாரிய எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அதற்கு காரணம் அந்தப் பகுதியில் இந்திய எல்லை எதுவென்று இந்திய அரசுக்கு தெரியாது; வரையறுக்கப்பட்ட, தெளிவான எல்லை கிடையாது.

சீன அரசு எல்லைப்புற சர்வே முடித்து 1958 ஜூலையில் ஒரு பூகோள வரைபடம் வெளியிட்டது. அதில் இந்திய-சீன எல்லையை வரையறுப்பதில் தவறு இருப்பதாக 1958 ஆகஸ்ட் 21ந்தேதியிட்டு இந்திய அரசு ஒரு ஆட்சேபக் குறிப்பு அனுப்பியது. இந்தியா -பாகிஸ்தானுக்கிடையிலான தகராறில் உள்ள காஷ்மீரின் லடாக் பிராந்தியத்தின் பெரும்பகுதி சீனாவினுடையதாகக் காட்டப்பட்டிருக்கிறது என்று அப்போது தான் முதன்முறையாக இந்திய அரசு ஆட்சேபம் தெரிவித்தது. அதற்கு ஒரு மாதத்துக்கு முன்பு அதாவது 1958 ஜூலை 2ந்தேதி, கிழக்கு லடாக்கில் உள்ள குர்னாக் கோட்டையை சீனா கைப்பற்றியுள்ளதாக ஒரு வாய்வழிக்குறிப்பு கொடுக்கப்பட்டது. 1958 அக்.18ந்தேதி இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சீனத்தூதருக்கு அதிகாரபூர்வமற்ற ஒரு குறிப்புக் கொடுத்தார். ''இந்திய அரசிடமிருந்து முன் அனுமதியின்றி, இந்திய அரசுக்குத் தெரிவிக்காமலேயே விவகாரத்தக்கு இடமில்லாதவாறு இந்தியாவுக்குச் சொந்தமான பகுதி வழியே யேசெங்-கார்டோக் சாலையின் ஒரு பகுதியை சீனா அமைத்துள்ளது'' என்று அதில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த 34 மட்டக் குதிரைகளையும் 15 நபர்களையும்கூட காணவில்லை என்று அக்குறிப்பில் விசாரிக்கப்பட்டிருந்தது. ஆனாலும்கூட இவையெல்லாம் சில்லரை எல்லை விவகாரங்கள் தான் என்று வெளிவிவகாரச் செயலர் குறிப்பிட்டிருந்தார்.

1958 நவம்பர் 8ந் தேதி சீன வெளிவிவகாரத் துணைமந்திரியிடம் இந்தியத் தூதர் ஒரு குறிப்புக் கொடுத்தார். ''இந்தப் பகுதியைத் தம்முடையதாக சீனர்கள் உரிமை கொண்டாடுகிறார்கள் என்று இப்போது தெளிவாகிறது. ஒரு குறிப்பிட்ட பகுதி இந்தியாவினுடையதா சீனாவினுடையதா என்கிற விவகாரத்துக்குரிய பிரச்சினை தனியே கையாள வேண்டியது'' என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார். இந்தக் குறிப்புகள் கூட சீனர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று அறியவது; அந்த ஆண்டு கோடையில் சிங்கியாங்-திபேத் சாலை சரியாக எந்த இடத்தில்

[illegible]
தியத் து[illegible] ஆகிய நோக்கமுடையவைதான். மற்றபடி பாரிய ஆட்சேபங்களை எழுப்புவது அல்ல. ஏனெனில் அதன்பிறகு, 1958, டிச.14இல்- எல்லைப் பிரச்சினை குறித்து சீனப் பிரதமருக்கு நேரு எழுதிய அதிகாரபூர்வமான கடிதத்தில் காஷ்மீர் எல்லைப் பிரதேசமான லடாக் குறித்து எதுவுமேகுறிப்பிட வில்லை.

1951இல் நிறுவப்பட்டு 1953இல் இறுதி அறிக்கை சமர்ப்பித்த இந்தியாவின் வடக்கு மற்றும் வடகிழக்கு எல்லைக் கமிட்டியிடம் வெளிவிவகார அமைச்சகத்தின் வரலாற்றுப் பிரிவின் முதல் இயக்குநர் தெரிவித்த கருத்தும் இது தான்: ''காஷ்மீரின் வடமேற்கு மூலையில் உள்ள கில்ஜித் பிராந்தியத்தில் ரஷ்யப் பேரரசுக்கு முகங்கொடுத்து நிற்கும் ''வாக்கான் தொடர்பகுதி'' என்றழைக்கப்படும் ஆஃப்கான் பிரதேசத்தின் ஒரு குறுகிய நேர்கோட்டுப் பகுதி உள்ளது. அது மட்டுமே காலனிய ஆட்சிக் காலத்தின் பூகோள வரைபடங்களில் நிச்சயமானதாக வரையப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.''

காஷ்மீரின் வடக்கு, வடகிழக்கு எல்லைகள் பற்றி ஆங்கிலேய காலனிய அதிகாரிகள், எல்லை வரைவாளர்கள், ஆய்வாளர்கள் ஆகியோர் மூன்று வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டிருந்தனர். அவை:

1. 1865-இல் ஜான்சன் எல்லை வரையறுப்பு என்பதை அடிப்படையாகக் கொண்டது ஜான் அர்டாக் எல்லைக் கோடு.

[illegible]
யார்கண்ட் மற்றும் அதன் கிளை ஆறுகள், காராகாஷ் ஆறு ஆகியவற்றிற்கு உள்ளடங்கிய பிரதேசங்களும், அக்சாய்சின் பள்ளத்தாக்கு முழுவதும் ஆங்கிலேயக் காலனிக்குள் அடங்கும்.

2. மக்கார்ட்னி-மக்டேனால்டு (1899) எல்லைக் கோடு காரகோரம் மலைத்தொடருக்கு வடக்கே உள்ள பகுதி முழுவதையும் உரிமை கொண்டாடுகிறது. ஆனால் இதன்படி காராகாஷ் மற்றும் பெரும்பாலான அக்சாய்சின் ஆகிய பள்ளத்தாக்குகளை சீனாவுக்குரியதாக ஒப்புக் கொள்ளுகிறது; லாக்சாங் மலைத்தொடர் வழியே போகும் இந்த எல்லைக்கோட்டின்படி லிங்ஷிடாங் உப்புப்பள்ளத்தாக்குகள், சென்மோ பள்ளத்தாக்கு மற்றும் அதற்கு வடக்கே உள்ள சிட்காட் ஆறுவரையிலானப் பகுதிகள் இந்தியாவுக்குரியவை ஆகிறது.

இப்படி ஒரு ''சமரசமான'' கட்டளை இருப்பினும் அதற்குமாறாக நேரு அரசு நடந்துகொண்டு பழியை கீழேஉள்ள அதிகாரிகள் மீது போட்டது. 1959 அக்.31ந் தேதி கோங்கா கணவாய் அருகே சீன எல்லைக் காவல் படைக்கும், இந்திய-திபேத் எல்லைக்காவல் படைக்கும் இடையே மோதல் ஏற்பட்டு 9 இந்தியப் படையினர் இறந்தனர். இது இந்திய-சீன எல்லைத் தகராறில் ஒரு முக்கியமான தீர்க்கமான நிகழ்ச்சியாக அமைந்தது. இந்திய மக்களிடையே ஆத்திரம்-வெறியூட்டப்பட்டு, இந்திய அரசு தந்திரத் துறை எகிறிக்குதித்தது. ''மோதல் நடந்த



1962: தேசிய வெறி கண்ணை மறைக்க சீன ஆக்கிரமிப்பு யுத்தத்தில் முன்னேறும் இந்திய ராணுவம்



படிப்பகம்

டத்தின் படியிலான மரபுரீதியிலான இந்திய-சீன எல்லையிலிருந்து 40, 50 மைல்களுக்கு மேற்கே உள்ளது. இந்திய பிராந்தியத்துக்குள் சீனத்துருப்புகள் புகுந்து கோங்கா கணவாயில் திடீரென்று, 'ஆக்கிரமிப்புத் தாக்குதல் நடத்தி இருக்கிறது'' என்று கடுமையாக கண்டித்து புதுடில்லியிலுள்ள சீனத்தூதருக்கு 1959, அக்.23ந்தேதி இந்திய அரசு ஒரு குறிப்பு அனுப்பியது.

அதே சமயம் இந்திய அரசுக்குள் நடந்துகொண்டிருந்த நிகழ்ச்சிகள் இதன் இரட்டை வேடம், கபடத்தனம், ஆக்கிரமிப்பு, அக்கிரமத்தைக் காட்டுகின்றன. கோங்கா கணவாய் அருகே சீன ரோந்துப் படையுடனான மோதலுக்குத் தலைமை யேற்றவர் இந்தோ-திபேத் எல்லைப்படை ஆணையாளர் கரம்சிங். அவர் அளித்த வாக்குமூலத்தின் படி, ''லடாக்கின் முன்னணிப் பகுதிகளில் புதிய சோதனைச் சாவடிகளை நிறுவும்படி உள்துறை (போலீசு) அமைச்சகத்தின் துணை இயக்குநர் சர்மாயிடமிருந்து உத்திரவு வந்தது; அப்படி செய்யும்போது தான் இந்திய-சீன எல்லை மோதல் நடந்தது'' என்கிறார். ஆக, தெளிவான எல்லை எது என்று தெரியாது என்று கூறிக்கொண்டுள்ள லடாக் பிராந்தியத்தில் இந்திய அரசு புதிய சோதனைச் சாவடிகளை நிறுவ முயன்றது தான் கோங்கா கணவாய் மோதலுக்குக் காரணம்.

''சீனாவின் ஆத்திர மூட்டும் ஆக்கிரமிப்பை''க் கண்டித்து சீனத் தூதருக்கு அறிக்கை கொடுத்த அதே நாளில் இந்திய அரசுக்குள் என்ன நடந்தது தெரியுமா? ''அக்டோபர் 23ந்தேதி மோதல் சம்பவம் பற்றிய உண்மை விவரங்கள் பிரதமருக்குத் தெரியவந்ததும் அவர் ஒரு கூட்டத்தைக் கூட்டினார். இராணுவமந்திரி, இராணுவத் தலைமைத் தளபதி, வெளிவிவகாரம், உள்துறை (போலீசு) மற்றும் இராணுவ அமைச்சக அதிகாரிகள் அதில் கலந்து கொண்டனர். எல்லையிலே 'விஸ்தரிப்பு-ஆக்கிரமிப்பு மற்றும் ஆத்திரமூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டதாக இந்தியாவின் உளவுப்படை (ஐ.பி)யின் மீது குறிவைத்து இந்திய இராணுவத் தலைமையகமும் வெளிவிவகார அமைச்சகமும் குற்றம் சாட்டின. இராணுவத்தின் அனுமதியின்றி இனிமேலும் ஆயுதந்தாங்கிய போலீசு எல்லைப்புறத்தில் நடமாடக்கூடாது என்று இராணுவம் கோரியது. அதை நேரு ஏற்றுக்கொண்டார். அதன் விளைவாக எல்லைப் புறக் காவல் பணி இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்

வடிக்கைகளும் இராணுவத்தலைமையின் அனுமதி பெற்றாக வேண்டும் என்றானது.'' இதை எழுதியவர் இந்திய உளவுப்படையின் அப்போதைய இயக்குநரும் நேருவின் கைக்கூலியுமான பி.என்.முல்லிக் (நேருவோடு எனது சில ஆண்டுகள் பக்:243-44).

ஆக, இந்திய உளவுப்படை (ஐ.பி) இயக்குநருடைய வாக்கு மூலத்தின்,

1959 ஆக.31ந்தேதி நடாளுமன்றத்தில் அதற்கு பதில் சொன்னார் நேரு. ''வடகிழக்கு எல்லை பிராந்திய நிலைமையிலிருந்து லடாக் நிலைமை வேறானது. லடாக் எல்லை இவ்வளவு ஆண்டுகாலம் ஜம்மு-காஷ்மீர் அரசின் கீழ் இருந்தது. பிரிட்டிஷ் அதிகாரிகள் ஒரு நூறாண்டுகளுக்கு முன்பு அங்கு போய் ஒரு எல்லைக்கோடு வரைந்தனர்; சீனா அதை ஒப்புக்கொள்ளவில்லை; இருந்தபோதும் அங்கே என்ன நடக்கிறது என்பது யாருக்கும் சரியாகத் தெரியாது. பிரச்சினை நிச்சயமாக பரிசீலனைக்கும், விவாதத்துக்கும் உரியது'' என்றார். இப்படித்தான் செப்.10, செப்.12 ஆகிய தேதிகளிலும் தனது நாடாளுமன்ற உரையில் சொன்னார். 1957 செப்.25ந்தேதி சண்டிகரில் கூடிய அகில இந்திய காங்கிரசுக் கமிட்டியின் நகல் அறிக்கையிலும், ''வடகிழக்கிந்திய எல்லைப்புற விவகாரங்கள்'' பற்றி மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. சில காங்கிரசார் ஆட்சேபம் தெரிவித்தபின் வெறுமனே ''லடாக்'' பற்றியும் சேர்த்துக் கொண்டனர் என்கிறது இந்து ஏடு (1959 செப்.28).

1959 செப். 13ந்தேதி நேரு ஒரு அதிகாரபூர்வ கட்டளை பிறப்பித்தார். அதிலே, '' அக்சாய்சின் பகுதியை இப்போதுள்ள நிலையிலேயே ஏறக்குறைய விட்டுவிட வேண்டும்; ஏனெனில் அங்கே நமக்குச் சோதனைச் சாவடிகளோ, போக்குவரத்துத் தொடர்பு வசதியோ கிடையாது. எல்லைப்புறம் முழுமைக்குமான விரிந்த பிரச்சினையாக வரும் சமயம் உருவாகும் போது மட்டுமே அது சம்பந்தமான பிரச்சினைகளைப் பரிசீலிக்க முடியும். இப்போதைக்கு லடாக்கின் வடகிழக்கு பகுதியை சீனா வசப்படுத்திக் கொண்டிருப்பதையும் அதன் குறுக்கே உள்ள அவர்களுடைய சாலையையும் நாம் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டியது தான்'' என்று குறிப்பிட்டிருந்தார் (நிவில் மாக்ஸ்வெல் எழுதிய இந்தியாவின் சீனயுத்தம் பக்.130).

3. காரகோரம் எல்லைக் கோடு இது நீர் தாரைகளை எல்லையாகக் கொண்டு, பக்கம் உள்ளதை மட்டுமே இந்தியாவுக்குரியதாக உரிமை கொண்டாடுகிறது (இந்திய சட்டத்துறை கமிஷனின் முதலாவது தொகுதியிலுள்ள இந்திய வரைபடம் இந்தக் காரகோரம் மலைத்தொடரைத் தான் காஷ்மீரின் வடக்கு, வடகிழக்கு எல்லையெனக் காட்டுகிறது).

அதிகார மாற்றத்துக்கு முன்பு, அதாவது 1938ம் ஆண்டு இந்திய வரைபடத்தில் காஷ்மீர் மற்றும் சீனாவுக்கிடையிலான எல்லைக் கோடோ, நிற மாற்றமோ எதுவுமே கிடையாது. 1945இல் இருந்து இந்த எல்லைப் பகுதியை ''வரையறுக்கப் படாதது''என்று குறிப்பிட்டு வந்திருப்பினும் ஏறக்குறைய ஜான் அர்டாக் கோடு உள்ள பகுதியில் மேலோட்டமான-ஊகமான கருத்தை ஏற்படுத்தும் வகையில் வண்ணக்கலவை பூசிக்காட்டப் பட்டிருக்கிறது. இந்த மாற்றமும் அப்போது பிரிட்டிஷ் காலனிய இந்திய அரசின் வெளிவிவகார செயலராக இருந்த ஒலப்காரோவின் நடவடிக்கை தான்! அதன் பிறகு 1954வரை இதே அணுகுமுறை இருந்து வந்தது.

ஆனால் 1954 ஜூலையில் திடீரென்று, ஒருதலைப்பட்சமாக ஜான் ஆர்டாக் கோடுதான் காஷ்மீரின் வடக்கு, வடகிழக்கு எல்லையென்று குறிப்பிடும் இந்திய வரைபடம் நேருவின் இரகசிய சுற்றறிக்கையோடு அனுப்பப்பட்டது. இதுகூட எதிர்காலத்தில் சீனாவுடன் உரிமை கோரி பேரம் பேசுவதற்காக செய்துகொண்ட ஏற்பாடுதான். ஏனெனில் 1959 ஆக -செப்டம்பரில் கூட மக்மகோன் எல்லைக் கோடுதான் தெளிவானது; காஷ்மீர் எல்லை பற்றி தெளிவில்லை என்று நேரு ஒப்புக்கொண்டுள்ளார். லோக்ஜூ பகுதியில் நடந்த இந்திய-சீன எல்லை மோதல் மற்றும் அக்சாய்சின் சாலை பற்றி எதிர்க்கட்சியினர் ஆத்திரப்பட்டு கேள்வி எழுப்பினர்.

ஆக, இந்திய உளவுப்படை (ஐ.பி) இயக்குநருடைய வாக்குமூலத்தின்படி கோங்கா கணவாய் வரை இந்திய பிராந்தியத்துக்குள் ஆக்கிரமிப்பு செய்து, இந்திய எல்லைக்காவல் படையினரைத் தாக்கிக் கொன்றதாக சீனாவுக்கு எதிராக குற்றஞ்சாட்டிக் கொண்டிருந்தபோதே, இந்திய அரசுக்குள் நடந்த விவாதத்தில், ஆய்வில் இந்திய உள்துறை (போலீசு)யும், அதன் உளவுப் படையும்தான் ஆத்திரமூட்டும் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டது என்று குற்றஞ்சாட்டப் பட்டன. இந்த ஆத்திரமூட்டும் ஆக்கிரமிப்பு நேருவின் கட்டளைக்கு மாறானது; அவருக்குத் தெரியாமலேயே ஏதோ கீழ் அதிகாரிகளினால் உத்திரவிட்டு நடந்தது என்று இப்போதும் நியாயப்படுத்தி வருகிறார்கள் நேருவின் விசுவாசிகள். ஆனால், இது உண்மையானால் அதன் பிறகாவது நேரு திருந்திக்கொண்டிருக்க வேண்டாமா? திருந்துவதற்கு பதிலாக மேலும் அதிகமான ஆதிக்க-ஆக்கிரமிப்பு வெறியோடு இந்திய-சீன எல்லைப் பிரச்சினையை அணுகத் தொடங்கினார்.

(தொடரும்...)

இந்திய உளவுப்படை (ஐ.பி) இயக்குனர் பி.என்.முல்லிக்கின் வாக்குமூலத்தின்படி, கோங்கா கணவாய்வரை இந்தியப் பிராந்தியத்துக்குள் ஆக்கிரமிப்பு செய்து, இந்திய எல்லைக் காவல் படையினரைத் தாக்கிக் கொன்றதாக சீனாவுக்கு எதிராக நேரு அரசு குற்றஞ்சாட்டிக் கொண்டிருந்தபோது, இந்திய அரசுக்குள் நடந்த விவாதத்தில் - ஆய்வில் இந்திய உள்துறை (போலீசு)யும், அதன் உளவுப் படையும் தான் ஆத்திரமூட்டும் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டன என்று குற்றஞ் சாட்டப்பட்டது.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# ஏழை நாடுகளைச் சுடுகாடாக்க ஏகாதிபத்தியங்களின் புதிய சதி

அச்சுறுத்தும் அணு ஆயுதப் போர்கள், போதை மருந்து வியாபாரம், எயிட்ஸ், மாஃபியா கும்பல்களின் கள்ள ஆயுத வியாபாரம், உலக வங்கியின் கடன் சுமை, பஞ்சம், பசி -பட்டினிச் சாவுகள் - இவை எல்லாவற்றையும் விஞ்சும் வகையில் மூன்றாம் உலக ஏழை நாடுகளை புதிய பேரபாயம் கவ்வியுள்ளது.

அது எப்போது எங்கே நிகழும், அதனால் ஏற்படும் பேரழிவுகளைப் பற்றி யாராலும் கண்டறிய முடியாது. திடீரென புதிய புதிய நோய்கள் பரவும்; நீர்நிலைகளும் நிலமும் நஞ்சாகிப் போகும். மீன்கள் செத்து மிதக்கும்; பசுமை நிறைந்த பயிர்கள் திடீரென கருகிப் போகும்.

அதிர்ச்சியையும் பீதியையும் ஊட்டக் கூடிய இது மனித குலத்துக்கே ஆபத்தான நச்சு ரசாயனக் கழிவுகளால் உருவாகிறது. இந்த பேராபத்தை உலகின் பணக்கார நாடுகளான ஏகாதிபத்தியங்களே உருவாக்குகின்றன. ஏகாதிபத்திய நாடுகளில் தேங்கும் ரசாயன ஆலைக் கழிவுகள், அணு உலைக் கழிவுகள் முதலான கொடிய நச்சுக் கழிவுகள் ரகசியமாக உலகின் எங்கோ ஒரு மூலையில் ஏதாவது ஒரு ஏழை மூன்றாம் உலக நாட்டில் கொண்டுவந்து கொட்டப்படுகிறது. ஏகாதிபத்தியங்களின் மக்கள் விரோத இச்சதியையும், அதன் பின்னே இயங்கும் நச்சு வியாபார நாசகார கும்பலையும் பற்றிய செய்திகள் இப்போது மெதுவாகக் கசிந்து வெளிவரத் துவங்கியுள்ளன.

வறுமைப் படுகுழியில் விழுந்து கிடக்கும் ஏழை ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றுதான் நைஜீரியா. அந்நாட்டு விவசாயி ஒருவருக்கு 8000 பீப்பாய்கள் பூச்சி மருந்து கப்பலில் வந்திறங்கியது. இறக்குமதியான பீப்பாய் ஒன்றிலிருந்து திரவம் கசிவதைப் பார்த்து உள்ளூர் பத்திரிக்கைகள் அது நச்சுக் கழிவாக இருக்கலாம் என்ற சந்தேகத்தை எழுப்பின. அதைத் தொடர்ந்து, நைஜீரிய அரசு அவற்றை சோதனையிட்ட போது, அவை மனித குலத்துக்கே மிக ஆபத்தான கொடிய பி.சி.பி. எனப்படும் ரசாயனக் கழிவு என்பது தெரிய வந்தது. இதே போல் கள்ளத்தனமாகவும் சட்ட விரோதமாகவும் 50க்கும் பேற்பட்டோர் கொடிய ரசாயனக் கழிவுகளை ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து ரகசியமாக தமது நிலங்களில் புதைத்து வைத்திருப்பதும், ஒரு பெரிய சதிகார கும்பல் இதன் பின்னணியால் இயங்கி வருவதும் கண்டறியப்பட்டது.

ஏறத்தாழ 100 டன் எடையுள்ள நச்சுக் கழிவுகளை தமது புதைக்க இசைந்த அந்த விவசாயிக்கு மாதம் 100 டாலர் (ரூ.1500) தருவதாக இத்தாலிய நிறுவனம் பேரம் நடத்தியுள்ளது. விளைவுகளைப் பற்றிய விபரம் புரியாத நைஜீரிய விவசாயிகளில் பலர் தமது வறுமை காரணமாக இச்சதிக்குப் பலியாகியுள்ளனர். ஆனால் பல்வேறு ஏழை மூன்றாம் உலக நாடுகளின் மக்கள் விரோத அரசுகள் அறிந்தே இச்சதியை நடத்தி வருகின்றன.


ஆப்பிரிக்க கண்டத்திலுள்ள இன்னொரு சிறிய நாடு கினியா-பிசாவ். வெளிப்படையாகவே அந்நாடு ஏகாதிபத்தியங்களின் குப்பைத் தொட்டியாக உள்ளது. அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்தியங்களிடமிருந்து கொடிய நஞ்சான அணு உலைக் கழிவுகளையும், ரசாயன ஆலைக் கழிவுகளையும் வாங்கி தமது நாட்டில் புதைத்து அதன் மூலம் கோடிக்கணக்கில் சம்பாதித்துள்ளது கினியா-பிசாவ் அரசு. அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் ஒரு லட்சம் டன் நச்சுக் கழிவுகளை இறக்குமதி செய்து அதன் மூலம் 1000 கோடி ரூபாயை ஈட்டவும் முடிவு செய்துள்ளது.

சொந்த நாட்டையே சுடுகாடாக்கும் இச் சாவு வியாபாரத்தை ஏன் செய்கிறீர்கள் என்று பத்திரிக்கையாளர்கள் கேட்ட போது அந்நாட்டின் சுற்றுலாத் துறை மந்திரி சொன்னார், "எங்களுக்குத் தேவை பணம்! எங்கள் நாட்டின் ஏழ்மையைப் போக்க வேறு வழி தெரியவில்லை" என்று.

கினியா - பிசாவ் பகிரங்கமாகவே இம் மாபாதகத்தைச் செய்து வரும் போது, இன்னும் பல ஏழை நாடுகளின் மக்கள் விரோத அரசுகள் அதை ரகசியமாகச் செய்து வருகின்றன. துருக்கி, ஹெய்தி, பிலிப்பைன்ஸ், குயானா முதலான நாடுகளின் கடற்கரையில் இத்தகைய நச்சுக் கழிவுகளைக் கொண்ட கப்பல்கள் வலம் வந்து கொண்டிருக்கின்றன.

ஒரு டன் நச்சுக் கழிவுகளை சக்தியிழக்கச் செய்து நீர்த்துப் போக செய்ய குறைந்தது ஆயிரம் டாலர் செலவிட வேண்டும். அதைவிட அவற்றை ரகசியமாக கடலில் கொட்டுவது அல்லது மூன்றாம் உலக நாடுகளில் கொண்டுபோய் புதைப்பது என்பது மிக சிக்கனமானது; தமது நாட்டுக்கும் பாதுகாப்பானது என்பதாலேயே பல ஏகாதிபத்தியங்கள் நச்சுக் கழிவு ஏற்றுமதியை தேர்ந்தெடுத்துள்ளன.

ஆயுத வியாபாரம்,போதை மருந்து வியாபாரம் ஆகியவற்றைவிட நச்சுக் கழிவு வியாபாரம்தான் கொழுத்த லாபம் தரக்கூடிய தொழிலாக மாறியுள்ளது.சிக்கலே இல்லாமல் குறுகிய காலத்திலேயே குபேரர்களாவதற்கான குறுக்கு வழியாக இருப்பதால் பல நாடுகளிலுள்ள தரகர்கள் இந்தத் தொழிலை சமீப காலமாக தெரிவு செய்துள்ளனர்.ஆயுத பேரத்தைப் போலவே இதிலும் கொழுத்த பங்கு மூன்றாம் உலக நாடுகளின் மக்கள் விரோத ஆட்சியாளர்களுக்குக் கிடைக்கிறது.எனவே வெளிப்படையாகவும்,ரகசியமாகவும் நடந்து வரும் இத்தொழில்தான் இன்றுமுன்னணியில் உள்ளது.




நச்சுக் கழிவுக் கப்பல் சென்ற பாதை; கடைசியாக இலங்கையிலிருந்து புறப்பட்ட அக்கப்பல் மாயமாய் மறைந்து விட்டது.



படிப்பகம்

www.padippakam.com

இந்த நச்சுக் கழிவுகளைப் பாதுகாப்பான முறையில் சுத்திகரித்து செயலிழக்கச் செய்யும் வேலையைச் செய்வதாகக் கூறிக் கொண்டு பல போலியான நிறுவனங்கள் ஏகாதிபத்திய நாடுகளில் உள்ளன. ஒரு பெரிய ரசாயன ஆலையிலிருந்து நச்சுக் கழிவுகள் இப்படிப்பட்ட ஒரு நிறுவனத்துக்கு அனுப்பப்படும். அந்த நிறுவனம் இந்த வேலையை வேறொரு நிறுவனத்துக்கு காண்டிராக்ட் விட்டு விடும். இப்படியே பல கம்பெனிகளுக்கு கைமாறிப் போய் விட்டதாகவும் தாங்கள் சட்ட விதிகளுக்கு உட்பட்டு நடப்பதாகவும் ஏகாதிபத்தியக் கம்பெனிகள் ஏய்க்கின்றன. போபர்ஸ் ஆயுத பேரத்தில் எவ்வாறு பல நாடுகளின் பினாமி நிறுவனங்கள் இயங்கியதோ அதே போல நச்சுக் கழிவு வியாபாரத்திலும் பல மோசடி நிறுவனங்கள் ஏகபோகமாக உள்ளன.


சட்டப்படி நச்சுக் கழிவுகளை ஏற்றுமதி செய்யக் கூடாது என்று பல ஐரோப்பிய நாடுகள் கூறினாலும், பெரும்பாலான ஏகாதிபத்திய கம்பெனிகள் நச்சுக் கழிவுகளின் மேல் மரத்தூளைப் போட்டு அடைத்து அவற்றை எறிந்து போன மரக் கழிவுகள் என்ற பெயரில் ஏற்றுமதி செய்கின்றன. ஜெர்மனியின் 'வெபர் லிமிடெட்' என்ற ஏற்றுமதி வர்த்தகக் கம்பெனி நீண்ட காலமாக இந்த மோசடியைச் செய்து வந்துள்ளது.

துருக்கி நாட்டில் ஒரு சிமெண்ட் ஆலைக்காக மரத்தூள் கழிவுகளை வெபர் லிமிடெட் கம்பெனி அனுப்பி வைத்தது. பெரும் பீப்பாய்களில் அடைக்கப்பட்டு வந்திறங்கிய அம்மரத்தூள் கழிவுகள் சில நாட்கள் பயன்படுத்தப் படாமல் வைக்கப் பட்டிருந்தது. அதற்குள் அது வைக்கப் பட்டிருந்த நிலமே நிறம் மாறி நச்சு வாடை வீசத் தொடங்கியது. துருக்கிய அரசு அதை ஆராய்ந்த போது அது கொடிய நச்சுக் கழிவு என்று தெரியவந்தது.

மே.ஜெர்மனியில் இத்தகைய நச்சு ரசாயனக் கழிவுகளைப் பாதுகாப்பாகச் சுத்திகரித்து நீர்த்துப் போகச் செய்ய ஒரு டன்னுக்கு ரூ.8000 வரை செலவாகிறதாம். ஆனால் நச்சுக் கழிவுகளை ரகசியமாக ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களுக்கு ரூ.5000 கொடுத்தால் அவை அந்த ஆலைக் கழிவுகளை எடுத்துச் சென்று விடுகின்றன. பின்னர் அந்த நச்சு வியாபார நிறுவனம் பல பினாமி கம்பெனிகளின் பெயர்களில் அவற்றை ரூ.1500 செலவில் நாட்டை விட்டு வெளியேற்றி உலகின் எங்கோ ஒரு மூலையில் கொண்டு போய் கொட்டி விடும். எந்த சிக்கலும் இல்லாமல் கொழுத்த லாபம் சம்பாதிக்கும் இத் தொழிலை பல நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு ரகசியமாக செய்து வருகின்றன.

ஜெல்லி வாக்ஸ் என்ற இத்தாலிய மெழுகு உற்பத்தியாளன் தனது தொழிலை மாற்றிக் கொண்டு நச்சுக் கழிவு வியாபாரத்தில் இறங்கி ஒரே ஆண்டில் ரூ.15 கோடி சம்பாதித்து விட்டான். டிஜிபொடி குடியரசு என்ற மிகச் சிறிய ஆப்பிரிக்கக் கண்டத்தின் உச்சியிலுள்ள நாட்டுக்கு 12,000 பீப்பாய் நச்சுக் கழிவுகளை அவன் கப்பலில் ஏற்றி அனுப்பினான். ஆனால் அந்நாடு பேரத்தில்

# நடுக்கடலில் நாடோடிகளாகத் திரியும் நச்சுக் கப்பல்கள்



நடுக்கடலில் அலைந்து திரியும் நச்சுக் கப்பல். அதைக் கண்காணித்து பின் தொடர்ந்து செல்லும் பசுமை அமைதி இயக்கத்தின் படகு.

நச்சுக் கழிவுகளைக் கொண்ட பல கப்பல்கள் ஐம்பெருங் கடல்களில் நாடோடிகளாக ஆண்டுக் கணக்கில் அலைந்து கொண்டே இருக்கின்றன. இப்படித்தான் ஜெல்லி வாக்ஸ் என்ற இத்தாலிய நச்சுக் கப்பல் ஓராண்டுக்கும் மேலாக கடலில் அலைந்து கொண்டிருந்தது.

அமெரிக்காவின் பிலடெல்பியாவிலிருந்து நச்சுக் கழிவுகளை ஏற்றிக் கொண்டு புறப்பட்ட பஹாமா நாட்டுக் கப்பல் ஒன்று, கடந்த இரண்டாண்டு காலமாக ஒவ்வொரு நாட்டுத் துறைமுகங்களிலிருந்து விரட்டப் பட்டதால் கடலிலேயே அலைந்து கொண்டிருந்தது. சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கான பசுமை அமைதி இயக்கத்தினர் அக்கப்பலை பின் தொடர்ந்து ஒரு படகில் சென்று கண்காணித்தனர். கடைசியில் அது இலங்கைக்குச் சென்றது. அங்கிருந்தும் விரட்டப் பட்டதால் அது இந்துமாக் கடலில் சிறிது காலம் அலைந்து கொண்டிருந்தது. அண்மையில் அக் கப்பலையே காண முடியவில்லை; திடீரென மறைந்து விட்டது என்கின்றனர் பசுமை அமைதி இயக்கத்தினர்.

நச்சுக் கழிவுகளை சுத்திகரிப்பதை விட அதைக் கப்பலில் ஏற்றி நடுக்கடலில் கப்பலையே மூழ்கடிக்கச் செய்வது செலவு குறைவானது என்பதால், அண்மையில் அமெரிக்காவிலிருந்து புறப்பட்ட பல நச்சுக் கழிவுக் கப்பல்கள் நடுக் கடலில் மூழ்கடிக்கப் பட்டுள்ளன. அதே போல பஹாமா நாட்டுக் கப்பலும் இந்துமாக் கடலில் மூழ்கடிக்கப் பட்டிருக்கலாம் என்கின்றனர் பசுமை அமைதி இயக்கத்தினர்.

நச்சுக் கழிவு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ரகசிய உலகப் பேர்வழிகள், அடிக்கடி நச்சுக் கழிவுக் கப்பல்களின் பெயரையும் வர்ணத்தையும் மாற்றிக் கொள்வதால் அது எந்த நாட்டுக் கப்பல் என்பதை யாராலும் எளிதில் கண்டறிய முடியாதபடி செய்கின்றனர். "மனித குலம் வாழும் பகுதிகளில் கொட்டினால் தானே பிரச்சினை; நாங்கள் ஆளரவமற்ற பகுதிகளில் (கச்சத் தீவு போல) கொண்டு போய்க் கொட்டுகிறோம்" என்று நியாய வாதங்களை கூறிக் கொண்டு அவ்வாறே செய்து வருகின்றனர். இதற்கென சில ஏழை நாடுகளின் பொறுப்பிலுள்ள ஆளரவமற்ற குட்டித் தீவுகளைக் கூட ரகசியமாக விலைக்கு வாங்கியுள்ளனர். இப்போது சில சுற்றுச் சூழல் அமைப்புகளைக் கூட விலைபேசி "நச்சுக் கழிவுகளை ஏற்றுமதி செய்வதும், அதை பாதுகாப்பான முறையில் கடலில் கொட்டுவதும் தவறல்ல" என்று நற்சான்றிதழ் கொடுக்கச் செய்யுமளவுக்கு இந்த ரகசிய உலகப் பேர்வழிகள் முன்னேறி விட்டனர்.

படிப்பகம்

www.padippakam.com

ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இறக்குமதி செய்ய மறுத்து விட்டது. பின்னர் அங்கிருந்து அந்நச்சுக் கழிவுக் கப்பல் தென் அமெரிக்க நாடான வெனிசுலாவுக்குச் சென்றது. அந்நாட்டைச் சேர்ந்த ஒரு பதப்படுத்தப்படும் நிறுவனத்துக்கு இக் கழிவுகளைக் கொண்டு வந்துள்ளதாகக் கூறி அவற்றை இறக்கி விட்டு அக்கப்பல் சென்று விட்டது. ஆனால் வெனிசுலா நாட்டில் அப்படி எந்த நிறுவனமும் உண்மையில் இறக்குமதி செய்யவில்லை. போலியாக அப்படி ஒரு கம்பெனி நச்சுக் கழிவுகளை இறக்குமதி செய்துள்ளதாக ஜெல்லி வாக்ஸ் ஏமாற்றி விட்டதை வெனிசுலா அரசு அறிந்தது.


இதற்கிடையே பீப்பாய்களிலிருந்து நச்சுக் கழிவுகள் கசியத் தொடங்கி அதன் விளைவாக பகுதிவாழ் பச்சிளங் குழந்தைகள் இனம் புரியாத நோய்க்கு ஆளாயினர். உடலெங்கும் கட்டிகளும், வாந்தி - பேதியும் ஏன் மரணமும் கூட ஏற்பட்டது. ஆத்திரமுற்ற மக்கள் இம்மரணப் பீப்பாய்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்தனர். அதன் பிறகு வெனிசுலா அரசும், இத்தாலிய அரசும் இதை வெளியேற்றுவதற்கு யார் பொறுப்பேற்பது என்பதைப் பற்றி ஓராண்டு காலம் வாதிட்டன. பொது மக்கள் நிர்பந்தம் காரணமாக அந்நச்சுக் கழிவுகளை வெனிசுலா அரசு இத்தாலிக்கே திருப்பியனுப்பியது. ஆனால் அதை ஏற்றிச் சென்ற கப்பல் மாலுமிகள் தலைவலி, கண் எரிச்சல், வாந்தி பேதி முதலானவற்றால் கடுமையாக பாதிக்கப் பட்டனர்.

இச்செய்தி மெதுவாகப் பரவத் தொடங்கியதும் ஆப்பிரிக்க கண்டத்திலுள்ள முக்கியமான 10 துறைமுகங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் இனி நச்சுக் கழிவுப் பீப்பாய்களை கப்பலிலிருந்து இறக்க மாட்டோம் என்று ஏகாதிபத்தியங்களை எச்சரித்துள்ளனர். இதன் விளைவாக ஏற்கனவே இறக்குமதி செய்ய ஒப்புக் கொண்ட பல ஆப்பிரிக்க நாடுகள் இப்போது மறுத்து வருகின்றன. இதனால் பெருமளவு நட்டப்பட்ட இத்தாலிய அரசு, இக் கழிவுகளை பதப்படுத்தி நீர்த்துப் போகச் செய்வதற்கான செலவை ஜெல்லி வாக்ஸ் நிறுவனம் தான் தரவேண்டும் என்று வழக்கு தொடுத்துள்ளது.

ஆனால் ஜெல்லி வாக்ஸ் நிறுவனமோ, "இவற்றை இறக்குமதி செய்ய ஒப்புக் கொண்ட பல ஆப்பிரிக்க நாடுகள் இப்போது மறுப்பது அயோக்கியத்தனமானது. இதற்கு நாங்கள் பொறுப்பேற்க முடியாது. இத்தாலிய அரசு இந்நாடுகளுக்குக் கொடுக்கும் உதவித் தொகையிலிருந்து எடுத்து இக்கழிவுகளை அழிக்க செலவிட்டுக் கொள்ளட்டும்," என்று எதிர் வழக்கு தொடுத்துள்ளது.

நல்ல நியாயம்தான்! இப்படி இத்தாலியை மட்டுமின்றி பல ஆப்பிரிக்க நாடுகளையும் ஆட்டிப் படைக்குமளவுக்கு இந்த நாசகார கும்பல்கள் இன்று பூதாகரமாக வளர்ந்து விட்டன. "ஒன்று, இந்த நச்சுக் கழிவுகளை இறக்குமதி செய்து கொள். அல்லது உங்கள் நாட்டுக்கான உதவி நிறுத்தப்படும்," என்று இனி இத்தாலிய அரசு ஏழை ஆப்பிரிக்க நாடுகளை மிரட்டப் போகிறது. இது ஏதோ இத்தாலிக்கும் ஆப்பிரிக்க நாடுகளுக்குமான பிரச்சினை அல்ல. எல்லா ஏகாதிபத்தியங்களும் இதே முறையில் ஏழை நாடுகளை அச்சுறுத்தி அடிபணிய வைக்கும். சுருக்கமாகச் சொன்னால் அணு ஆயுதங்கள், ரசாயன ஆயுதங்களைப் போல நச்சுக் கழிவுகள் என்பது ஏகாதிபத்தியங்களின் கையில் கிடைத்துள்ள புதியவகை ஆயுதம். நவீன காலனியாதிக்கத்திற்கான புதிய சாதனம்.

பல்வேறு ஏகாதிபத்தியங்களின் வேட்டைக் காடாக உள்ள இந்தியாவில் நச்சுக் கழிவுகளால் ஏற்படும் பேரபாயம் மிக அதிகமாகவே உள்ளது. சொந்த நாட்டு மக்களைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளி விட்டு, ஆயுதங்களை வாங்கிக் குவித்துக் கொண்டு அதில் அடித்த கமிஷனில் சுவிஸ் வங்கியில் 'தாமரை'யாக மலர்ந்துள்ள பரிசுத்த பாசிஸ்டு ஆளும் நம் நாட்டில் அபாயம் மிக அதிகமாகவே உள்ளது. இதை உறுதிப்படுத்தும் வகையில் இந்துமாக்கடல் பிராந்தியத்தில் தான் அடிக்கடி நச்சுக் கழிவுக் கப்பல்கள் மிதப்பதாக உலகச் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கான பசுமை அமைதி இயக்கம் அறுதியிட்டுக் கூறியுள்ளது.




*நச்சுக் கழிவுகளைக் கொட்ட இடம்தேடி அலையும் கப்பல்: இத்தாலி நாட்டு கர்ராரா துறைமுகத்தில் நங்கூரமிட்டபோது கண்டுபிடிக்கப்பட்டது.*

ஏறத்தாழ இரு மாதங்களுக்கு முன் அஸ்ஸாம், மே.வங்க மாநிலங்களிலும் அண்டை நாடான வங்க தேசத்தின் கடலோரப் பகுதிகளிலும் திடீரென மீன்கள் செத்து மிதக்கத் தொடங்கியுள்ளன. கிடைக்கும் கொஞ்ச நஞ்ச மீன்களை உண்போர் இனம் புரியாத நோய்க்கு பலியாகியுள்ளனர். மீன் பிடித் தொழிலே இப்போது அப்பிராந்தியத்தில் நசிந்து போய் 50,000 மீனவக் குடும்பங்கள் பிழைப்பைத் தேடி வேறிடங்களுக்கு ஓடுகின்றனர். இந்த நிலைமை ஏற்பட என்ன காரணம் என்பதை இதுவரை யாராலும் கண்டறிய முடியவில்லை. ரகசியமாக ரசாயன கழிவுகள் இப்பகுதியில் கொட்டப்பட்டு அதனால் ஏற்படும் விளைவாக இருக்கக் கூடும் என்று இப்போது அஞ்சப் படுகிறது.

இது ஒரு புறமிருக்க, இந்தியாவிலேயே உள்ள அணு உலைகளிலிருந்து வெளியாகும் கொடிய நச்சுக் கழிவுகள் எங்கே கொண்டு போய் கொட்டப் படுகின்றன; அவை பாதுகாப்பான முறையில் உள்ளதா என்பதைப் பற்றி அறிந்து கொள்ள இந்தியக் குடிமகனுக்கு உரிமையில்லை. பிரதமருக்கும் குடியரசுத் தலைவருக்கும் கூட இதைப் பற்றி அணுசக்தித் துறை அறிவிக்க வேண்டிய அவசியமில்லை. வரம்பற்ற அதிகாரத்தைக் குவித்துக் கொண்டு தேசப் பாதுகாப்புக்கான ரகசியம் என்ற பெயரில் அணுசக்தித் துறை அதிகாரிகள் ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து எவற்றை இறக்குமதி செய்தார்கள்? அதில் கொடிய நச்சுக் கழிவுகள் எவ்வளவு? அவை எங்கே ரகசியமாகப் புதைக்கப் பட்டுள்ளன? ஆளும் பாசிச ராஜீவ் கும்பலுக்கு அதில் கிடைத்த கமிஷன் எவ்வளவு என்பதை யாராலும் கண்டறிய முடியாது.

மீண்டும் உலகத்தை ஒரு பேரபாயம் கவ்வியுள்ளது. அணு ஆயுத யுத்தம், ரசாயன யுத்தம் முதலானவற்றைப் போலவே ரகசியமாக நடந்துவரும் நச்சுக் கழிவு யுத்தமும் கொடியது. இக் கொடுமையை யார் செய்தார்கள் என்பதைக் கூட கண்டறிய முடியாது. இனம் புரியாத தீராத நோய்களும், நிலமும் நீரும் பயிரும் நஞ்சாகிப் போவதும் அதன் உடனடி விளைவுகள். மனிதகுல விரோத ஏகாதிபத்தியங்கள் ஏழை நாடுகளை சுடுகாடாக்குமுன்னே விழித்தெழுங்கள்! நவீன காலனியாதிக்கத்திற்கான, மனித குல பேரழிவுக்கான புதியவகை யுத்தத்தில் ரகசியமாக இறங்கியுள்ள ஏகாதிபத்தியங்களுக்கும் அதன் அடிவருடி பாசிச ராஜீவ் கும்பலுக்கும் எதிராக பாட்டாளி வர்க்கத் தலைமையில் புரட்சிகர நீதியான யுத்தத்தைத் தொடுக்க அணி திரளுங்கள்!

○

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ் மதியழகன், 21, பாலாஜி சிங் தெரு, வசந்தப்பேட்டை, சென்னை - 600 015. அச்சிடுபவர்:
படிப்பகம்

www.padippakam.com




# இதுதான் இன்றைய இந்தியா

இதோ, இந்தப் போராட்ட வீராங்கனைகள், போபால் நகரத்து சகோதரிகள். அமெரிக்க ஏகாதிபத்திய பகாசுர நிறுவனமான யூனியன் கார்பைடு கொலைகார கம்பெனியின் விஷவாயுப் படுகொலைக்கு தங்கள் பச்சிளங் குழந்தைகளை, உற்றார் உறவினர்களை பலி கொடுத்த அபலைகள் சார்பாக போராடும் மகளிர் அமைப்பினர். சரியாக நான்காண்டுகளுக்கு முன்'84 டிசம்பர் 4ந்தேதி நள்ளிரவு நகரத்து உழைக்கும் மக்களைக் காவுகொண்ட யூனியன் கார்பைடு நிறுவனத்துக்கு எதிராக இவர்கள் நடத்தும் சளையாத போராட்டத்தின் தொடர்ச்சி இது.

விஷவாயு கசிவால் படுகொலைக்கு உள்ளானவர்களுக்கும் பல்வேறு நோய்கள் பீடிக்கப் பட்டு நடைபிணங்களாக வாழும் 50,000க்கும் மேற்பட்ட உழைக்கும் மக்களுக்கும் யூனியன் கார்பைடு கொலைகார நிறுவனமும், அந்நிறுவனத்தை இன்றளவும் பேணிப் பாதுகாத்து வரும் பாசிச ராஜீவ் அரசும் எவ்வித பொறுப்பும் எற்கவில்லை. இதுமட்டுமல்ல, நியாயமான நிவாரண உதவிகோரி போராடும் பாதிக்கப் பட்ட மக்களைப் பார்த்து ''பிச்சைக் காரர்கள் ''சோம்பேறிகள்''. ''ஒழுக்கங்கெட்டவர்கள்'' என்று இழிவாக கொச்சைப் படுத்தி ஈனத்தனமான பிரச்சாரம் செய்கிறது, யூனியன் கார்பைடு நிர்வாகம். அதை அனுமதித்து வேடிக்கைப் பார்க்கிறது பாசிச ராஜீவ் கும்பல்.

விஷவாயு படுகொலைகளுக்கு பிறகு ''போபால் யூனியன் கார்பைடு நிறுவனத்தில் விஷவாயு கசிவு விபத்து தடுப்புக்கான போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவில்லை'' என்று அரசு தரப்பு அறிக்கைகளே அம்பலப்படுத்திய பிறகும் இன்றுவரை அதை கண்டு கொள்ளாமல் மேலும் அந்நிறுவனத்தின் உற்பத்தியைப் பெருக்க தாராள அனுமதியளித்து போராடும் இந்திய மக்கள் அனைவரையும் அவமானப்படுத்துகிறது பாசிச ராஜீவ் கும்பல்.

இதோ, இது போபால் நகரத்தில் பாசிச ராஜீவ் கும்பலின் அடிவருடிக் கூட்டம் பிப்ரவரி 4ந் தேதிமுதல் 18ந்தேதி வரை நடத்திய ''உலக கவி விழா'' காட்சி இது. 200 லட்ச ரூபாய் செலவில் உலகத்தின் 31 நாடுகளின் 'பிரபல' கவிஞர்களை வரவழைத்து ஆபாச கவிமழையில் நனைந்து திளைத்து நீச்சலடித்தது காங்கிரசு கும்பல். ''எங்களுக்கு தேவை உணவும் நிவாரணமும். கவிதை அல்ல'' என்று பாதிக்கப் பட்டவர்கள் போராட அதையும் மீறி டெல்லி, ஜவகர்லால் நேரு நூற்றாண்டு விழா கமிட்டியும் மத்திய பிரதேச காங்கிரசு ஆட்சியின் கலாச்சாரத்துறையும் இணைந்து இந்த பிரமாண்டமான உலக கவி விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தன.

இன்று, நேற்றல்ல கடந்த நான்காண்டு காலமாகவே, குறிப்பாக போபால் விஷவாயு படுகொலை நினைவு தினத்தின் போதெல்லாம், பாதிக்கப்பட்டவர்களின் வெஞ்சினத்தை திசை திருப்ப, அவர்களுக்கு ஆதரவாக திரளும் உழைக்கும் மக்களை கவர்ந்திழுக்க இப்படி ஏதாவது ஒரு ஆபாச கூத்தடிக்கிறது, ஆளும் காங்கிரசு கும்பல்.

சொந்த நாட்டு மக்களின் உழைப்பை மட்டுமல்ல, அவர்களின் உயிரையும் பன்னாட்டு பகாசுர நிறுவனங்களின் லாபவெறிக்கு பலி கொடுத்து, அதற்கு எதிரான உழைக்கும் மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்ட உணர்வுகளையும் கொச்சைப் படுத்தும் மக்கள் விரோத தேச விரோத காங்கிரசு கட்சிக்கும் ஆட்சிக்கும் நாம் பாடை கட்டுவது எப்போது?



படிப்பகம்